# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2296 - 2022 සැප්තැම්බර් මස 02 වැනි සිකුරාදා - 2022.09.02

*2296 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1318 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1355 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1315-B 82377-5,413 (2022/ 09)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

*அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.*

I. *விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;*

II. *விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;*

III. *இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;*

IV. *குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;*

V. *இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;*

VI. *குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;*

VII. *பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;*

VIII. *பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.*

*பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.*

1. *சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.*
2. *பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.*
3. *பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.*
4. *சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.*
5. *பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.*
6. *பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;*
7. *உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.*
8. *பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.*
9. *பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.*
10. *பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள்* (Electronic Communication Instruments/ Devices) *தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.*
11. *இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*
12. *பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.*
13. *எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.*
14. *பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.*
15. *பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.*
16. *பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.*
17. *பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:*

    (i) *சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;*

    (ii) *பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;*

    (iii) *பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.*

    (a) *ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.*

    (b) *சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.*

    (iv) *பரீட்சார்த்தி புளூடூத்* (Bluetooth) *போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை* (Electronic Communication Devices) *உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;*

    (v) *பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;*

    (vi) *பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;*

    (vii) *நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;*

    (viii) *விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;*

    (ix) *கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;*

    (x) *கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;*

    (xi) *ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;*

    (xii) *உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;*

    (xiii) *ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.*

*பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.*

*இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

வணிகக் கப்பல் செயலகம்

துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் கீழ் நடாத்திச் செல்லப்படும் வணிகக் கப்பல் செயலகத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு உரிய தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:-

| | பதவி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பணிப்பாளர் (கப்பல்) | 01 |
| 02 | பணிப்பாளர் (பொறியியல்) | 01 |
| 03 | துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (கப்பல் தளம்) | 01 |
| 04 | துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (பொறியியல்) | 02 |
| 05 | பரீட்சை பரிசோதகர் (பொறியியல்) | 02 |

## துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் வணிக கப்பல் செயலகத்தின் பணிப்பாளர் (கப்பல்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2022

துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு வணிகக் கப்பல் செயலகத்தின் பணிப்பாளர் (கப்பல்) பதவிக்கு இங்கு இரண்டாம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:-

| | பதவி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பணிப்பாளர் (கப்பல்) | 01 |

01. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை.-** இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து அரசாங்க சேவைகள் ஆணைகுழுவினால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை முடிவின் மீது ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெறும் அபேட்சகர்களைக் கொண்டு வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்யப்படும். நேர்முகப் பரீட்சையின் போது பின்பற்றப்படும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதும் கட்டமைக்கப்பட்டதுமான புள்ளி வழங்கும் நடவடிக்கைமுறையானது இந்த அறிவித்தலின் 05 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. **தேவையான தகைமைகள்:**

(i) **கல்வித் தகைமைகள், அனுபவம் உட்பட பிற தகைமைகள்.-**

| பதவி | கல்வித் தகைமைகள் | அனுபவமும் பிற தகைமைகளும் |
|---|---|---|
| பணிப்பாளர் (கப்பல்) | இலங்கை அல்லது ஐக்கிய இராச்சியம் அல்லது அவுஸ்திரேலியா அல்லது கனடா அல்லது சீனா அல்லது இந்தியா அல்லது பாகிஸ்தான் அல்லது நியூசிலாந்து அல்லது மலேசியா அல்லது சிங்கப்பூர் அல்லது தென் ஆபிரிக்கா அல்லது அயர்லாந்து ஆகிய நாடுகளில் அல்லது இயைபுள்ள சான்றிதழை ஏற்றுக்கொள்வது சம்பந்தமாக இலங்கையுடன் இருதரப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ள நாடொன்றில் அரசாங்க கப்பற்துறை நிருவாக நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட கப்பல் தலைவர் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் | தனி எடை 3,000 தொன் கொண்ட கடல் பிரயாணத்தில் ஈடுபடும் வணிக கப்பல் ஒன்றில் தலைவராக ஆகக் குறைந்தது இரண்டு (02) வருட கால அனுபவம் இருத்தல். |

**(ii) உடற்தகுதி** : அபேட்சகர் ஒவ்வொருவரும் இலங்கையில் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கும் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் ஆரோக்கியமும் சிறந்த மனநிலையும் கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

**(iii) வயதெல்லை**.- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்றுக்கு 30 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**(iii) பிற தகைமைகள்** :

* விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்;
* விண்ணப்பதாரர்கள் நற்பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு : விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்றுக்கு விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட சகல தகைமைகளையும் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **பணிக்கமர்த்தல் நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்**:

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதிய திட்டம் சம்பந்தமாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படம் கொள்கைத் தீர்மானங்களுக்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். தாங்கள் விதவைகள்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகைகள் செலுத்த வேண்டும் என்பதோடு அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் விதித்துரைக்கின்றவாறு உதவுதொகையானது செலுத்தப்படுதலும் வேண்டும்.

(ii) இந்த நியமனமானது மூன்று (03) வருட கால தகுதிகூர் காலப்பகுதிக்கு உட்பட்டதாகும். இந்த பதவியின் I ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு ஐந்து (05) வருட காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உள்ளவாறு முதலாம் வினைத்திறமைகாண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 2020.10.16 ஆந் திகதியிடப்பட்டதும் 18/2020 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிருவாக சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக அரச கரும மொழியில் / மொழிகளில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

(iv) இந்த நியமனம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும் அரசாங்க நிதி நியதிக்கும் திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் துறைமுகங்கள் கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் வணிக கப்பல் செயலகத்தின் பணிப்பாளர் (கப்பல்) பதவிக்குரிய ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு ஏற்கனவே செய்யப்பட்டுள்ளதும் எதிர்காலத்தில் செய்யப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

(v) விண்ணப்பிக்கும் மொழி மூலமானது பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாதென்பதோடு, விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் மொழிமூலமானது நியமனத்தைப் பெறுவதற்கு தகைமையுடைய மொழி மூலமாகும்.

4. **சம்பள அளவுத் திட்டம்**. - இந்தப் பதவிக்கு ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 ரூபா 1,10,895.00 (மாதாந்த) கொண்ட சம்பள அளவுத் திட்டம் உரியதாவதோடு, இந்த சம்பள அளவுத் திட்டத்தின் 20 ஆம் படிநிலையில் (ரூபா 76,175.00) அமர்த்தி சம்பளம் வழங்கப்படும். (இதற்கு மேலதிகமாக 85,000.00 ரூபாவைக் கொண்ட தொழில்சார் கொடுப்பனவு அடங்கலாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் சிறப்புரிமைகளும் இந்த பதவிக்கு உரித்துடையதாகும்.)

5. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் புள்ளி வழங்கும் திட்டமானது அடிப்படையாகக் கொள்ளப்படும்:-

| தொடர் இல. | | விடயம் | புள்ளிகள் | ஆகக் கூடிய புள்ளி களின் அளவு |
|---|---|---|---|---|
| **01.** | | **மேலதிகக் கல்வித் தகைமைகள் :** | | **30** |
| | i. | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து/ நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட இயந்திர பொறியியல், கடல் பொறியியல் மற்றும் கடல் அறிவியல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு சார்பில் | 30 | |
| | ii. | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து/ நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடல் பொறியியல், இயந்திர பொறியியல் மற்றும் கடல் அறிவியல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா சார்பில் | 20 | |
| | iii. | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து/ நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடல் பொறியியல், இயந்திர பொறியியல் மற்றும் கடல் அறிவியல் தொடர்பிலான பட்டம் சார்பில்<br>(ஆகக்கூடுதலான தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | 15 | |
| **02.** | | **தொழிற் தகைமைகள்** | | **10** |
| | | சமுத்திர கண்காணிப்பு, சமுத்திர சட்டம், ஒழுங்குவிதி, சமுத்திர பரிசோதனை மற்றும் ஆய்வு அல்லது கப்பற்துறை அலுவல்கள் பாதுகாப்புத் தொடர்பிலான சர்வதேச நியமங்கள் போன்ற துறை முகங்களுக்குரியதாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட - | | |
| | i. | ஆறு (06) மாத காலம் அல்லது அதற்கு கூடுதலான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில் | 10 | |
| | ii. | மூன்று (03) மாத காலம் அல்லது அதற்கு கூடுதலான அத்துடன் ஆறு (06) மாதங்களுக்கு குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில் | 07 | |
| | iii. | மூன்று (03) மாத காலத்திற்கு குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில்<br><br>(ஆகக் கூடுதலாக இரண்டு (02) சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படலாம்) | 03 | |
| **03.** | | **மேலதிக அனுபவம்** | | **30** |
| | i. | அரசாங்க கப்பற்றுறை நிருவாகம் தொடர்பிலான நிறுவனமொன்றில் நிறைவேற்று அல்லது சிரேட்ட முகாமைத்துவ மட்ட பதவியொன்றில் சேவையாற்றி இருத்தல்<br>- ஆண்டொன்றுக்கு 04 புள்ளிகள் வீதம் ஆகக்கூடுதலாக 05 வருடங்கள் சார்பில்<br>- ஆறு (06) மாதங்களுக்கு கூடுதலான ஒரு (01) வருடத்துக்கு குறைவான - புள்ளிகள் 02 | 20 | |

| தொடர் இல. | | விடயம் | புள்ளிகள் | ஆகக் கூடிய புள்ளி களின் அளவு |
|---|---|---|---|---|
| | ii. | ஆட்சேர்ப்புத் திட்டத்தின் தகைமைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த அனுபவத்திற்கு மேலாகவுள்ள அனுபவ காலம் சார்பில் -<br>- ஆண்டொன்றுக்கு 02 புள்ளிகள் வீதம் ஆகக் கூடுதலாக 05 வருடங்கள் சார்பில்<br>- ஆறு (06) மாதங்களுக்கு கூடுதலான ஒரு (01) வருடத்துக்கு குறைவான- புள்ளி 01 | 10 | |
| 04. | **துறைசார்ந்த பங்களிப்பு :** | | | **10** |
| | துறைக்குரியதாக தேசிய அல்லது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் வெளியீடொன்றில் பிரசுரிக்கப்பட்ட வெளியீடொன்று அல்லது புலமை சொத்துடனான புத்தாக்கம் என்பன முறையான/ ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரங்கள் அல்லது சான்றிதழ்கள் மூலம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | | 10 | |
| 05. | **கணினி ஆற்றல் :** | | | **15** |
| | கடல் பொறியியல், இயந்திர, பொறியியல், கடல் அறிவியல் அல்லது கனிணி சார்ந்த பயிற்றுவித்தல் மற்றும் பரீட்சைகளை நடாத்துதல் போன்ற துறைகளுக்குரிய தகவல் தொழில்நுட்ப/ கனிணி முறைமை மற்றும் கனிணி பிரயோகம் தொடர்பில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட - | | | |
| | i. | ஆறு (06) மாத காலம் அல்லது அதற்கு கூடுதலான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில் | 15 | |
| | ii. | மூன்று (03) மாத காலம் அல்லது அதற்கு கூடுதலான அத்துடன் ஆறு (06) மாதங்களுக்கு குறைவான அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில் | 10 | |
| | iii. | மூன்று (03) மாத காலத்திற்கு குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில்<br><br>(ஆகக் கூடுதலாக இரண்டு (02) சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படலாம்) | 03 | |
| 06. | **நேர்முகப்பரீட்சையில் காட்டும் திறமை** | | | **05** |
| | | **மொத்தப் புள்ளிகள்** | | **100** |

**06. விண்ணப்பதாரர்களின் ஆள் அடையாளம்:**

(i) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவது சகல விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமாவர்.

(ii) நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகளையும் உரிய முறையில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(iii) நேர்முகப்பரீட்சையின் போது தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு பின்வருவன ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

**07. விண்ணப்பிக்கும் முறை :**

(i) விண்ணப்பங்களை 2022, ஒற்றோபர் 01 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

"வணிகக் கப்பல் பணிப்பாளர் அதிபதி,
வணிகக் கப்பல் செயலகம்,
43/89, பிறிஸ்ரல் கட்டிடம்,
1 ஆம் மாடி, யோர்க் வீதி,
கொழும்பு 01"

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரி விண்ணப்பப்படிவமானது இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது . விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பங்களை A4 அளவு தாளொன்றில் தயாரித்து முதலாம் பக்கத்தில் இலக்கம் 01 இலிருந்து 09 வரையும், இரண்டாம் பக்கத்தில் 10 இலிருந்து 15 வரையும் இருக்கக்கூடிய விதத்தில் தயாரித்து தத்தமது கையெழுத்துக்களில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் இட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பணிப்பாளர் (கப்பல்), பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் " எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணபதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவரினால்/ சமாதான நீதவான் ஒருவரினால்/ சத்திய ஆணையாளர் ஒருவரினால்/சட்டத்தரணி ஒருவரினால்/ பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால்/முப்படையைச் சேர்ந்த ஆணைபெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது 03/2016 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு அமைவாக ரூபா 32,807.00 கொண்ட மாதாந்த சம்பளமொன்றைப் பெறும் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்களுடைய விண்ணப்பங்களை தாம் சேவையாற்றும் திணக்களத்தின் திணைக்கள தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் பொறுப்பேற்கப் படமாட்டாது.

08. தங்களால்அனுப்பப்பட்டவிண்ணப்பத்தில்குறிப்பிடப்பட்டுள்ளஏதேனும்தகவல்உண்மையற்றதென அல்லதுபிழையானதென ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் உறுதிப்படுத்தப்பட்டால் தங்களது அபேட்சக தன்மை இரத்துச் செய்யப்படும். இத்தகைய உண்மையற்ற அல்லது பிழையான தகவல் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் உறுதிப்படுத்தப்பட்டால் அதற்குரியதான நடவடிக்கைமுறைகளுக்கு உட்பட்டு, சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

09. வெற்றிடத்தை நிரப்பும் அல்லது நிரப்பாது விடும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரியதாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

கே. டீ. எஸ். ருவன்சந்திர,
செயலாளர்,
துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு.

துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சு,
இலக்கம் 19, சைத்திய வீதி,
கொழும்பு 01,
2022.08.22.

## துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் வணிக கப்பல் செயலகத்தின் பணிப்பாளர் (பொறியியல்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2022

துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு வணிகக் கப்பல் செயலகத்தின் பணிப்பாளர் (பொறியியல்) பதவிக்கு இங்கு இரண்டாம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:-

| இல. | பதவி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பணிப்பாளர் (பொறியியல்) | 01 |

01. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை.-** இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து அரசாங்க சேவைகள் ஆணைகுழுவினால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை முடிவின் மீது ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெறும் அபேட்சகர்களைக் கொண்டு வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்யப்படும். நேர்முகப் பரீட்சையின் போது பின்பற்றப்படும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதும் கட்டமைக்கப்பட்டதுமான புள்ளி வழங்கும் நடவடிக்கைமுறையானது இந்த அறிவித்தலின் 05 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. **தேவையான தகைமைகள்:**

(i) **கல்வித் தகைமைகள், அனுபவம் உட்பட பிற தகைமைகள்.-**

| பதவி | கல்வித் தகைமைகள் | அனுபவமும் பிற தகைமைகளும் |
|---|---|---|
| பணிப்பாளர் (பொறியியல்) | இலங்கை அல்லது ஐக்கிய இராச்சியம் அல்லது அவுஸ்திரேலியா அல்லது கனடா அல்லது சீனா அல்லது இந்தியா அல்லது பாகிஸ்தான் அல்லது நியூசிலாந்து அல்லது மலேசியா அல்லது சிங்கப்பூர் அல்லது தென் ஆபிரிக்கா அல்லது அயர்லாந்து ஆகிய நாடுகளில் அல்லது இயைபுள்ள சான்றிதழை ஏற்றுக்கொள்வது சம்பந்தமாக இலங்கையுடன் இருதரப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ள நாடொன்றில் அரசாங்க கப்பற்துறை நிருவாக நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட பிரதான பொறியியலாளர் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் | 3,000 கிலோவோட்டுக்கு அதிகமான ஆற்றலுடைய பிரதான என்ஜின் ஒன்றைக் கொண்ட கடல் பிரயாணத்தில் ஈடுபடும் வணிக கப்பல் ஒன்றில் பிரதான பொறியியலாளராக ஆகக் குறைந்தது இரண்டு (02) வருட கால அனுபவம் இருத்தல். |

**(ii) உடற்தகுதி** : அபேட்சகர் ஒவ்வொருவரும் இலங்கையில் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கும் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் ஆரோக்கியமும் சிறந்த மனநிலையும் கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

**(iii) வயதெல்லை.-** விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்றுக்கு 30 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**(iv) பிற தகைமைகள்:**

* விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாய் இருத்தல் வேண்டும்;
* விண்ணப்பதாரர்கள் நற்பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு : விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்றுக்கு விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட சகல தகைமைகளையும் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **பணிக்கமர்த்தல் நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்:**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதிய திட்டம் சம்பந்தமாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். தாங்கள் விதவைகள்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகைகள் செலுத்த வேண்டும் என்பதோடு அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் விதித்துரைக்கின்றவாறு உதவுதொகையானது செலுத்தப்படுதலும் வேண்டும்.

(ii) இந்த நியமனமானது மூன்று (03) வருட கால தகுதிகூர் காலப்பகுதிக்கு உட்பட்டதாகும். இந்த பதவியின் I ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு ஐந்து (05) வருட காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உள்ளவாறு வினைத்திறமைகாண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 2020.10.16 ஆந் திகதியிடப்பட்டதும் 18/2020 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிருவாக சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக அரச கரும மொழியில் / மொழிகளில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

(iv) இந்த நியமனம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும் அரசாங்க நிதி நியதிக்கும் திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் துறைமுகங்கள் கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் வணிக கப்பல் செயலகத்தின் பணிப்பாளர் (கப்பல்) பதவிக்குரிய ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு ஏற்கனவே செய்யப்பட்டுள்ளதும் எதிர்காலத்தில் செய்யப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

(v) விண்ணப்பிக்கும் மொழி மூலமானது பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாதென்பதோடு, விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் மொழி மூலமானது நியமனத்தைப் பெறுவதற்கு தகைமையுடைய மொழி மூலமாகும்.

4. **சம்பள அளவுத் திட்டம்.** - இந்துப் பதவிக்கு ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 ரூபா 1,10,895.00 (மாதாந்த) கொண்ட சம்பள அளவுத் திட்டம் உரியதாவதோடு, இந்த சம்பள அளவுத் திட்டத்தின் 20 ஆம் படிநிலையில் (ரூபா 76,175.00) அமர்த்தி சம்பளம் வழங்கப்படும். (இதற்கு மேலதிகமாக 80,000.00 ரூபாவைக் கொண்ட தொழில்சார் கொடுப்பனவு அடங்கலாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் சிறப்புரிமைகளும் இந்த பதவிக்கு உரித்துடையதாகும்.)

6. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் புள்ளி வழங்கும் திட்டமானது அடிப்படையாகக் கொள்ளப்படும்:-

| தொடர் இல. | | விடயம் | புள்ளிகள் | ஆகக் கூடிய புள்ளிகளின் அளவு |
|---|---|---|---|---|
| 01. | **மேலதிகக் கல்வித் தகைமைகள் :** | | | **30** |
| | i. | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து/ நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடல் பொறியியல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு சார்பில் | 30 | |
| | ii. | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து/ நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடல் பொறியியல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா சார்பில் | 20 | |
| | iii. | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து/ நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடல் பொறியியல் தொடர்பிலான பட்டம் சார்பில் (ஆகக்கூடுதலான தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | 15 | |

| தொடர் இல. | விடயம் | | புள்ளிகள் | ஆகக் கூடிய புள்ளி களின் அளவு |
|---|---|---|---|---|
| 02. | **தொழிற் தகைமைகள்** | | | **10** |
| | சமுத்திர கண்காணிப்பு, சமுத்திர சட்டம், ஒழுங்குவிதி, சமுத்திர பரிசோதனை மற்றும் ஆய்வு அல்லது கப்பற்துறை அலுவல்கள் பாதுகாப்புத் தொடர்பிலான சர்வதேச நியமங்கள் போன்ற துறைகளுக்குரியதாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட – | | | |
| | i. | ஆறு (06) மாத காலம் அல்லது அதற்கு கூடுதலான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில் | 10 | |
| | ii. | மூன்று (03) மாத காலம் அல்லது அதற்கு கூடுதலான அத்துடன் ஆறு (06) மாதங்களுக்கு குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில் | 07 | |
| | iii. | மூன்று (03) மாத காலத்திற்கு குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில்<br><br>(ஆகக் கூடுதலாக இரண்டு (02) சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படலாம்) | 03 | |
| **03.** | **மேலதிக அனுபவம்** | | | **30** |
| | i. | அரசாங்க கப்பற்றுறை நிருவாகம் தொடர்பிலான நிறுவனமொன்றில் நிறைவேற்று அல்லது சிரேட்ட முகாமைத்துவ மட்ட பதவியொன்றில் சேவையாற்றி இருத்தல்<br>- ஆண்டொன்றுக்கு 04 புள்ளிகள் வீதம் ஆகக்கூடுதலாக 05 வருடங்கள் சார்பில்<br>- ஆறு (06) மாதங்களுக்கு கூடுதலான ஒரு (01) வருடத்துக்கு குறைவான – புள்ளிகள் 02 | 20 | |
| | ii. | ஆட்சேர்ப்புத் திட்டத்தின் தகைமைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த அனுபவத்திற்கு மேலாகவுள்ள அனுபவ காலம் சார்பில் –<br>- ஆண்டொன்றுக்கு 02 புள்ளிகள் வீதம் ஆகக் கூடுதலாக 05 வருடங்கள் சார்பில்<br>- ஆறு (06) மாதங்களுக்கு கூடுதலான ஒரு (01) வருடத்துக்கு குறைவான– புள்ளி 01 | 10 | |
| 04. | **துறைசார்ந்த பங்களிப்பு :** | | | **10** |
| | துறைக்குரியதாக தேசிய அல்லது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் வெளியீடொன்றில் பிரசுரிக்கப்பட்ட வெளியீடொன்று அல்லது புலமை சொத்துடனான புத்தாக்கம் என்பன முறையான/ ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரங்கள் அல்லது சான்றிதழ்கள் மூலம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | | 10 | |
| 05. | **கணினி ஆற்றல் :** | | | **15** |
| | கடல் பொறியியல், இயந்திர, பொறியியல், கடல் அறிவியல் அல்லது கணினி சார்ந்த பயிற்றுவித்தல் மற்றும் பரீட்சைகளை நடாத்துதல் போன்ற துறைகளுக்குரிய தகவல் தொழில்நுட்ப/ கணினி முறைமை மற்றும் கணினி பிரயோகம் தொடர்பில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட – | | | |

| தொடர் இல. | | விடயம் | புள்ளிகள் | ஆகக் கூடிய புள்ளி களின் அளவு |
|---|---|---|---|---|
| | i. | ஆறு (06) மாத காலம் அல்லது அதற்கு கூடுதலான அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில் | 15 | |
| | ii. | மூன்று (03) மாத காலம் அல்லது அதற்கு கூடுதலான முழுநேர அத்துடன் ஆறு (06) மாதங்களுக்கு குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில் | 10 | |
| | iii. | மூன்று (03) மாத காலத்திற்கு குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில்<br><br>(ஆகக் கூடுதலாக இரண்டு (02) சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படலாம்) | 03 | |
| 06. | **நேர்முகப்பரீட்சையில் காட்டும் திறமை சார்பில்** | | | **05** |
| | | **மொத்தம்** | | **100** |

**06. விண்ணப்பதாரர்களின் ஆள் அடையாளம்:**

(i) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவது சகல விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமாவர்.

(ii) நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகளும் உரிய முறையில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(iii) நேர்முகப்பரீட்சையின் போது தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வருன ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

**07. விண்ணப்பிக்கும் முறை :**

(i) விண்ணப்பங்களை 2022, ஒற்றோபர் 01 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

"வணிகக் கப்பல் பணிப்பாளர் அதிபதி,
வணிகக் கப்பல் செயலகம்,
43/89, பிறிஸ்ரல் கட்டிடம்,
1 ஆம் மாடி, யோர்க் வீதி,
கொழும்பு 01"

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரி விண்ணப்பப்படிவமானது இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பங்களை A4 அளவு தாளொன்றில் தயாரித்து முதலாம் பக்கத்தில் இலக்கம் 01 இலிருந்து 09 வரையும், இரண்டாம் பக்கத்தில் 10 இலிருந்து 15 வரையும் இருக்கக்கூடிய விதத்தில் தயாரித்து தத்தமது கையெழுத்துக்களில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் இட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பணிப்பாளர் (பொறியியல்), பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவரினால்/ சமாதான நீதிவான் ஒருவரினால்/ சத்திய ஆணையாளர் ஒருவரினால்/ சட்டத்தரணி ஒருவரினால்/ பிரசித்த

நொத்தாரிசு ஒருவரினால்/முப்படையைச் சேர்ந்த ஆணைபெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது 03/2016 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு அமைவாக ரூபா 32,807.00 கொண்ட மாதாந்த சம்பளமொன்றைப் பெறும் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்களுடைய விண்ணப்பங்களை தாம் சேவையாற்றும் திணைக்களத்தின் திணைக்கள தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் பொறுப்பேற்கப் படமாட்டாது.

08. தங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் உண்மையற்றதென அல்லது பிழையானதென ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் உறுதிப்படுத்தப்பட்டால் தங்களது அபேட்சக தன்மை இரத்துச் செய்யப்படும். இத்தகைய உண்மையற்ற அல்லது பிழையான தகவல் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் உறுதிப்படுத்தப்பட்டால் அதற்குரியதான நடவடிக்கைமுறைகளுக்கு உட்பட்டு, சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

09. வெற்றிடத்தை நிரப்பும் அல்லது நிரப்பாது விடும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரியதாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

கே. டீ. எஸ். ருவன்சந்திர,
செயலாளர்,
துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு.

துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சு,
இலக்கம் 19, சைத்திய வீதி,
கொழும்பு 01,
2022.08.22.

## துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் வணிக கப்பல் செயலகத்தின் துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (கப்பல் தளம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2022

துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு வணிகக் கப்பல் செயலகத்தின் துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (கப்பல் தளம்) பதவிக்கு இங்கு இரண்டாம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:-

| | பதவி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (கப்பல் தளம்) | 01 |

01. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை.**- இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து அரசாங்க சேவைகள் ஆணைகுழுவினால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை முடிவின் மீது ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெறும் அபேட்சகர்களைக் கொண்டு வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்யப்படும். நேர்முகப் பரீட்சையின் போது பின்பற்றப்படும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதும் கட்டமைக்கப்பட்டதுமான புள்ளி வழங்கும் நடவடிக்கைமுறையானது இந்த அறிவித்தலின் 05 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

**2. தேவையான தகைமைகள்:**

(i) **கல்வித் தகைமைகள், அனுபவம் உட்பட பிற தகைமைகள்.-**

| பதவி | கல்வித் தகைமைகள் | அனுபவமும் பிற தகைமைகளும் |
|---|---|---|
| துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (கப்பல் தளம்) | இலங்கை அல்லது ஐக்கிய இராச்சியம் அல்லது அவுஸ்திரேலியா அல்லது கனடா அல்லது சீனா அல்லது இந்தியா அல்லது பாகிஸ்தான் அல்லது நியூசிலாந்து அல்லது மலேசியா அல்லது சிங்கப்பூர் அல்லது தென் ஆபிரிக்கா அல்லது அயர்லாந்து ஆகிய நாடுகளில் அல்லது இயைபுள்ள சான்றிதழை ஏற்றுக்கொள்வது சம்பந்தமாக இலங்கையுடன் இருதரப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ள நாடொன்றில் அரசாங்க கப்பற்துறை நிருவாக நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட கப்பல் தலைவர் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் | தனி எடை 3,000 தொன் கொண்ட கடல் பிரயாணத்தில் ஈடுபடும் வணிக கப்பல் ஒன்றில் தலைவராக ஆகக் குறைந்தது இரண்டு (02) வருட கால அனுபவம் இருத்தல். |

**(ii) உடற்தகுதி** : அபேட்சகர் ஒவ்வொருவரும் இலங்கையில் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கும் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் ஆரோக்கியமும் சிறந்த மனநிலையும் கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

**(iii) வயதெல்லை.-** விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்றுக்கு 30 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**(iv) பிற தகைமைகள்:**

* விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாய் இருத்தல் வேண்டும்;
* விண்ணப்பதாரர்கள் நற்பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு : விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்றுக்கு விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட சகல தகைமைகளையும் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**3. பணிக்கமர்த்தல் நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்:**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதிய திட்டம் சம்பந்தமாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படம் கொள்கைத் தீர்மானங்களுக்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். தாங்கள் விதவைகள்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகைகள் செலுத்த வேண்டும் என்பதோடு அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் விதித்துரைக்கின்றவாறு உதவுதொகையானது செலுத்தப்படுதலும் வேண்டும்.

(ii) இந்த நியமனமானது மூன்று (03) வருட கால தகுதிகூர் காலப்பகுதிக்கு உட்பட்டதாகும். இந்த பதவியின் I ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு ஐந்து (05) வருட காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உள்ளவாறு முதலாம் வினைத்திறமைகாண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) *2020.10.16 ஆந் திகதியிடப்பட்டதும் 18/2020 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிருவாக சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக அரச கரும மொழியில் / மொழிகளில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.*

(iv) இந்த நியமனம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும் அரசாங்க நிதி நியதிக்கும் திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் துறைமுகங்கள் கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் வணிக கப்பல் செயலகத்தின் பணிப்பாளர் (கப்பல்) பதவிக்குரிய ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு ஏற்கனவே செய்யப்பட்டுள்ளதும் எதிர்காலத்தில் செய்யப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

(v) விண்ணப்பிக்கும் மொழி மூலமானது பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாதென்பதோடு, விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் மொழி மூலமானது நியமனத்தைப் பெறுவதற்கு தகைமையுடைய மொழி மூலமாகும்.

4. **சம்பள அளவுத் திட்டம்.** - இந்தப் பதவிக்கு ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895.00 (மாதாந்த) கொண்ட சம்பள அளவுத் திட்டம் உரியதாவதோடு, இந்த சம்பள அளவுத் திட்டத்தின் 20 ஆம் படிநிலையில் (ரூபா 76,175.00) அமர்த்தி சம்பளம் வழங்கப்படும். (இதற்கு மேலதிகமாக 80,000.00 ரூபாவைக் கொண்ட தொழில்சார் கொடுப்பனவு அடங்கலாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் சிறப்புரிமைகளும் இந்த பதவிக்கு உரித்துடையதாகும்.)

5. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் புள்ளி வழங்கும் திட்டமானது அடிப்படையாகக் கொள்ளப்படும்:-

| தொடர் இல. | | விடயம் | புள்ளிகள் | ஆகக் கூடிய புள்ளி களின் அளவு |
|---|---|---|---|---|
| 01. | **மேலதிகக் கல்வித் தகைமைகள் :** | | | **30** |
| | i. | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து/ நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடல் பொறியியல், மின் பொறியியல், இயந்திர பொறியியல் மற்றும் கடல் அறிவியல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு சார்பில் | 30 | |
| | ii. | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து/ நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடல் பொறியியல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா சார்பில் | 20 | |
| | iii. | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து/ நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடல் பொறியியல், மின் பொறியியல், இயந்திர பொறியியல் மற்றும் கடல் அறிவியல் தொடர்பிலான பட்டம் சார்பில்<br><br>(ஆகக்கூடுதலான தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | 15 | |
| 02. | **தொழிற் தகைமைகள்** | | | **10** |
| | சமுத்திர கண்காணிப்பு, சமுத்திர சட்டம், ஒழுங்குவிதி, சமுத்திர பரிசோதனை மற்றும் ஆய்வு அல்லது கப்பற்துறை அலுவல்கள் பாதுகாப்புத் தொடர்பிலான சர்வதேச நியமங்கள் போன்ற துறைகளுக்குரியதாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட - | | | |
| | i. | ஆறு (06) மாத காலம் அல்லது அதற்கு கூடுதலான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில் | 10 | |
| | ii. | மூன்று (03) மாத காலம் அல்லது அதற்கு கூடுதலான அத்துடன் ஆறு (06) மாதங்களுக்கு குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில் | 07 | |
| | iii. | மூன்று (03) மாத காலத்திற்கு குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில்<br><br>(ஆகக் கூடுதலாக இரண்டு (02) சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படலாம்) | 03 | |

| தொடர் இல. | | விடயம் | புள்ளிகள் | ஆகக் கூடிய புள்ளி களின் அளவு |
|---|---|---|---|---|
| **03.** | **மேலதிக அனுபவம்** | | | **30** |
| | i. | ஆட்சேர்ப்புத் திட்டத்தின் தகைமைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த அனுபவத்திற்கு மேலாகவுள்ள அனுபவ காலம் சார்பில் –<br>- ஆண்டொன்றுக்கு 05 புள்ளிகள் வீதம் ஆகக் கூடுதலாக 30 புள்ளிகள் சார்பில்<br>- ஆறு (06) மாதங்களுக்கு கூடுதலான ஒரு (01) வருடத்துக்கு குறைவான– புள்ளிகள் 02 | 10 | |
| 04. | **துறைசார்ந்த பங்களிப்பு :** | | | **10** |
| | துறைக்குரியதாக தேசிய அல்லது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் வெளியீடொன்றில் பிரசுரிக்கப்பட்ட வெளியீடொன்று அல்லது புலமை சொத்துடனான புத்தாக்கம் என்பன முறையான/ ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரங்கள் அல்லது சான்றிதழ்கள் மூலம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | | 10 | |
| 05. | **கணினி ஆற்றல் :** | | | **15** |
| | கடல் பொறியியல், இயந்திர பொறியியல் மற்றும் கடல் அறிவியல் போன்ற துறைகளுக்குரிய தகவல் தொழில்நுட்ப/ கணினி முறைமை மற்றும் கணினி பிரயோகம் தொடர்பில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட – | | | |
| | i. | ஆறு (06) மாத காலத்திற்கு கூடுதலான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில் | 15 | |
| | ii. | மூன்று (03) மாத காலம் அல்லது அதற்கு கூடுதலான அத்துடன் ஆறு (06) மாதங்களுக்கு குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில் | 10 | |
| | iii. | மூன்று (03) மாத காலத்திற்கு குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில்<br><br>(ஆகக் கூடுதலாக இரண்டு (02) சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படலாம்) | 03 | |
| 06. | **நேர்முகப்பரீட்சையில் காட்டும் திறமை சார்பில்** | | | **05** |
| | | **மொத்தம்** | | **100** |

**06. விண்ணப்பதாரர்களின் ஆள் அடையாளம்:**

(i) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவது சகல விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமாவர்.

(ii) நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகளையும் உரிய முறையில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(iii) நேர்முகப்பரீட்சையின் போது தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் பின்வருவன ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

07. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) விண்ணப்பங்களை 2022, ஒற்றோபர் 01 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

"வணிகக் கப்பல் பணிப்பாளர் அதிபதி,
வணிகக் கப்பல் செயலகம்,
43/89, பிறிஸ்ரல் கட்டிடம்,
1 ஆம் மாடி, யோர்க் வீதி,
கொழும்பு 01"

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரி விண்ணப்பப்படிவமானது இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பங்களை A4 அளவு தாளொன்றில் தயாரித்து முதலாம் பக்கத்தில் இலக்கம் 01 இலிருந்து 09 வரையும், இரண்டாம் பக்கத்தில் 10 இலிருந்து 15 வரையும் இருக்கக்கூடிய விதத்தில் தயாரித்து தத்தமது கையெழுத்துக்களில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் இட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (கப்பல் தளம்), பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் " எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவரினால்/ சமாதான நீதவான் ஒருவரினால்/ சத்திய ஆணையாளர் ஒருவரினால்/சட்டத்தரணி ஒருவரினால்/ பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால்/முப்படையைச் சேர்ந்த ஆணைபெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது 03/ 2016 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு அமைவாக ரூபா 32,807.00 ஐ மாதாந்த சம்பளமொன்றைப் பெறும் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்களுடைய விண்ணப்பங்களை தாம் சேவையாற்றும் திணக்களத்தின் திணைக்கள தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் பொறுப்பேற்கப் படமாட்டாது.

08. தங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் உண்மையற்றதென அல்லது பிழையானதென ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் தங்களது அபேட்சக தன்மை இரத்துச் செய்யப்படும். இத்தகைய உண்மையற்ற அல்லது பிழையான தகவல் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் நிரூபிக்கப்பட்டால் அதற்குரியதான நடவடிக்கைமுறைகளுக்கு உட்பட்டு, சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

09. வெற்றிடத்தை நிரப்பும் அல்லது நிரப்பாது விடும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரியதாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

கே. டீ. எஸ். ருவன்சந்திர,
செயலாளர்,
துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு.

துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சு,
இலக்கம் 19, சைத்திய வீதி,
கொழும்பு 01,
2022.08.22.

## துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் வணிக கப்பல் செயலகத்தின் துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (பொறியியல்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2022

துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு வணிகக் கப்பல் செயலகத்தின் துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (பொறியியல்) பதவிக்கு இங்கு இரண்டாம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

| | பதவி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (பொறியியல்) | 02 |

1. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை.-** இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து அரசாங்க சேவைகள் ஆணைகுழுவினால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை முடிவின் மீது ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெறும் அபேட்சகர்களைக் கொண்டு வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்யப்படும். நேர்முகப் பரீட்சையின் போது பின்பற்றப்படும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதும் கட்டமைக்கப்பட்டதுமான புள்ளி வழங்கும் நடவடிக்கைமுறையானது இந்த அறிவித்தலின் 05 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. **தேவையானதகைமைகள்:**

(i) **கல்வித் தகைமைகள், அனுபவம் உட்பட பிற தகைமைகள்.-**

| பதவி | கல்வித் தகைமைகள் | அனுபவமும் பிற தகைமைகளும் |
|---|---|---|
| துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (பொறியியல்) | இலங்கை அல்லது ஐக்கிய இராச்சியம் அல்லது அவுஸ்திரேலியா அல்லது கனடா அல்லது சீனா அல்லது இந்தியா அல்லது பாகிஸ்தான் அல்லது நியூசிலாந்து அல்லது மலேசியா அல்லது சிங்கப்பூர் அல்லது தென் ஆபிரிக்கா அல்லது அயர்லாந்து ஆகிய நாடுகளில் அல்லது இயைபுள்ள சான்றிதழை ஏற்றுக்கொள்வது சம்பந்தமாக இலங்கையுடன் இருதரப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ள நாடொன்றில் அரசாங்க கப்பற்துறை நிருவாக நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட பிரதான பொறியியலாளர் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் | 3,000 கிலோவோட்டுக்கு அதிகமான ஆற்றலுடைய பிரதான என்ஜின் ஒன்றைக் கொண்ட கடல் பிரயாணத்தில் ஈடுபடும் வணிக கப்பல் ஒன்றில் பிரதான பொறியியலாளராக ஆகக் குறைந்தது இரண்டு (02) வருட கால அனுபவம் இருத்தல். |

**(ii) உடற்தகுதி** : அபேட்சகர் ஒவ்வொருவரும் இலங்கையில் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கும் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் ஆரோக்கியமும் சிறந்த மனநிலையும் கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

**(iii) வயதெல்லை.-** விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்றுக்கு 30 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**(iv) பிற தகைமைகள்:**

* விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாய் இருத்தல் வேண்டும்;
* விண்ணப்பதாரர்கள் நற்பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு : விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்றுக்கு விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட சகல தகைமைகளையும் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **பணிக்கமர்த்தல் நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்:**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதிய திட்டம் சம்பந்தமாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படம் கொள்கைத் தீர்மானங்களுக்கு தாங்கள் கட்டுப்படுதல்

வேண்டும். தாங்கள் விதவைகள்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகைகள் செலுத்த வேண்டும் என்பதோடு அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் விதித்துரைக்கின்றவாறு உதவுதொகையானது செலுத்தப்படுதலும் வேண்டும்.

(ii) இந்த நியமனமானது மூன்று (03) வருட கால தகுதிகூர் காலப்பகுதிக்கு உட்பட்டதாகும். இந்த பதவியின் I ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு ஐந்து (05) வருட காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உள்ளவாறு முதலாம் வினைத்திறமைகாண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 2020.10.16 ஆந் திகதியிடப்பட்டதும் 18/2020 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிருவாக சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக அரச கரும மொழியில் / மொழிகளில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

(iv) இந்த நியமனம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும் அரசாங்க நிதி நியதிக்கும் திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் துறைமுகங்கள் கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் வணிக கப்பல் செயலகத்தின் பணிப்பாளர் (கப்பல்) பதவிக்குரிய ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு ஏற்கனவே செய்யப்பட்டுள்ளதும் எதிர்காலத்தில் செய்யப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

(v) விண்ணப்பிக்கும் மொழி மூலமானது பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாதென்பதோடு, விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் மொழி மூலமானது நியமனத்தைப் பெறுவதற்கு தகைமையுடைய மொழி மூலமாகும்.

*4.* ***சம்பள அளவுத் திட்டம்.*** - இந்தப் பதவிக்கு ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895.00 (மாதாந்த) கொண்ட சம்பள அளவுத் திட்டம் உரியதாவதோடு, இந்த சம்பள அளவுத் திட்டத்தின் 20 ஆம் படிநிலையில் (ரூபா 76,175.00) அமர்த்தி சம்பளம் வழங்கப்படும். (இதற்கு மேலதிகமாக 80,000.00 ரூபாவைக் கொண்ட தொழில்சார் கொடுப்பனவு அடங்கலாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் சிறப்புரிமைகளும் இந்த பதவிக்கு உரித்துடையதாகும்.)

5. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் புள்ளி வழங்கும் திட்டமானது அடிப்படையாகக் கொள்ளப்படும்:-

| தொடர் இல. | | விடயம் | புள்ளிகள் | ஆகக் கூடிய புள்ளி களின் அளவு |
|---|---|---|---|---|
| 01. | **மேலதிகக் கல்வித் தகைமைகள் :** | | | **30** |
| | i. | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து/ நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடல் பொறியியல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு சார்பில் | 30 | |
| | ii. | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து/ நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடல் பொறியியல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா சார்பில் | 20 | |
| | iii. | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து/ நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடல் பொறியியல், மின் பொறியியல், இயந்திர பொறியியல் மற்றும் கடல் அறிவியல் தொடர்பிலான பட்டம் சார்பில் (ஆகக்கூடுதலான தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | 15 | |

| தொடர் இல. | | விடயம் | புள்ளிகள் | ஆகக் கூடிய புள்ளி களின் அளவு |
|---|---|---|---|---|
| 02. | **தொழிற் தகைமைகள்** | | | **10** |
| | சமுத்திர கண்காணிப்பு, சமத்திர சட்டம், ஒழுங்குவிதி, சமுத்திர பரிசோதனை மற்றும் ஆய்வு அல்லது கப்பற்துறை அலுவல்கள் பாதுகாப்புத் தொடர்பிலான சர்வதேச நியமங்கள் போன்ற துறைகளுக்குரியதாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட - | | | |
| | i. | ஆறு (06) மாத காலம் அல்லது அதற்கு கூடுதலான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில் | 10 | |
| | ii. | மூன்று (03) மாத காலம் அல்லது அதற்கு கூடுதலான அத்துடன் ஆறு (06) மாதங்களுக்கு குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில் | 07 | |
| | iii. | மூன்று (03) மாத காலத்திற்கு குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில்<br><br>(ஆகக் கூடுதலாக இரண்டு (02) சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படலாம்) | 03 | |
| 03. | **மேலதிக அனுபவம்** | | | **30** |
| | ii. | ஆட்சேர்ப்புத் திட்டத்தின் தகைமைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த அனுபவத்திற்கு மேலாகவுள்ள அனுபவ காலம் சார்பில் -<br>- ஆண்டொன்றுக்கு 05 புள்ளிகள் வீதம் ஆகக் கூடுதலாக 30 புள்ளிகள் சார்பில்<br>- ஆறு (06) மாதங்களுக்கு கூடுதலான ஒரு (01) வருடத்துக்கு குறைவான - புள்ளிகள் 02 | 10 | |
| 04. | **துறைசார்ந்த பங்களிப்பு :** | | | **10** |
| | துறைக்குரியதாக தேசிய அல்லது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் வெளியீடொன்றில் பிரசுரிக்கப்பட்ட வெளியீடொன்று அல்லது புலமை சொத்துடனான புத்தாக்கம் என்பன முறையான/ ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரங்கள் அல்லது சான்றிதழ்கள் மூலம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | | 10 | |
| 05. | **கணினி ஆற்றல் :** | | | **15** |
| | கடல் பொறியியல், இயந்திர, பொறியியல், கடல் அறிவியல் சார்ந்த கணினி பிரயோகம், கப்பல்/ சமுத்திர விஞ்ஞானம் அல்லது கணினி சார்ந்த பயிற்றுவித்தல் மற்றும் பரீட்சைகளை நடாத்துதல் போன்ற துறைகளுக்குரிய தகவல் தொழில்நுட்ப/ கணினி முறைமை கணினி பிரயோகம் தொடர்பில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட - | | | |
| | i. | ஆறு (06) மாத காலத்திற்கு கூடுதலான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில் | 15 | |
| | ii. | மூன்று (03) மாத காலம் அல்லது அதற்கு கூடுதலான அத்துடன் ஆறு (06) மாதங்களுக்கு குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில் | 10 | |

| தொடர் இல. | | விடயம் | புள்ளிகள் | ஆகக் கூடிய புள்ளி களின் அளவு |
|---|---|---|---|---|
| | iii. | மூன்று (03) மாத காலத்திற்கு குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில்<br><br>(ஆகக் கூடுதலாக இரண்டு (02) சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படலாம்) | 03 | |
| **06.** | | **நேர்முகப்பரீட்சையில் காட்டும் திறமை சார்பில்** | | **05** |
| | | **மொத்தம்** | | **100** |

6. **விண்ணப்பதாரர்களின் ஆள் அடையாளம்:**

(i) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவது சகல விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமாவர்.

(ii) நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகளையும் உரிய முறையில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(iii) நேர்முகப்பரீட்சையின் போது தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் பின்வருன ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

7. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) விண்ணப்பங்களை 2022, ஒற்றோபர் 01 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

"வணிகக் கப்பல் பணிப்பாளர் அதிபதி,
வணிகக் கப்பல் செயலகம்,
43/89, பிறிஸ்ரல் கட்டிடம்,
1 ஆம் மாடி, யோர்க் வீதி,
கொழும்பு 01"

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரி விண்ணப்பப்படிவமானது இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது . விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பங்களை A4 அளவு தாளொன்றில் தயாரித்து முதலாம் பக்கத்தில் இலக்கம் 01 இலிருந்து 09 வரையும், இரண்டாம் பக்கத்தில் 10 இலிருந்து 15 வரையும் இருக்கக்கூடிய விதத்தில் தயாரித்து தத்தமது கையெழுத்துக்களில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் இட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (பொறியியல்), பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் " எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாயொன்றின் அதிபர் ஒருவரினால்/ சமாதான நீதவான் ஒருவரினால்/ சத்திய ஆணையாளர் ஒருவரினால்/ சட்டத்தரணி ஒருவரினால்/ பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால்/முப்படையைச் சேர்ந்த ஆணைபெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது 03/2016 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு அமைவாக ரூபா 32,807.00 கொண்ட மாதாந்த சம்பளமொன்றைப் பெறும் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்களுடைய விண்ணப்பங்களை தாம் சேவையாற்றும் திணக்களத்தின் திணைக்கள தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் பொறுப்பேற்கப் படமாட்டாது.

8. தங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் உண்மையற்றதென அல்லது பிழையானதென ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் எண்பிக்கப்பட்டால் தங்களது அபேட்சக தன்மை இரத்துச் செய்யப்படும். இத்தகைய உண்மையற்ற அல்லது பிழையான தகவல் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் எண்பிக்கப்பட்டால் அதற்குரியதான நடவடிக்கைமுறைகளுக்கு உட்பட்டு, சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

9. வெற்றிடத்தை நிரப்பும் அல்லது நிரப்பாது விடும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரியதாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

கே. டீ. எஸ். ருவன்சந்திர,
செயலாளர்,
துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு.

துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சு,
இலக்கம் 19, சைத்திய வீதி,
கொழும்பு 01,
2022.08.22.

## துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் வணிக கப்பல் செயலகத்தின் பரீட்சை பரிசோதகர் (பொறியியல்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2022

துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு வணிகக் கப்பல் செயலகத்தின் பரீட்சை பரிசோதகர் (பொறியியல்) பதவிக்கு இங்கு இரண்டாம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:-

| | பதவி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பரீட்சை பரிசோதகர் (பொறியியல்) | 02 |

01. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை.-** இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து அரசாங்க சேவைகள் ஆணைகுழுவினால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை முடிவின் மீது ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெறும் அபேட்சகர்களைக் கொண்டு வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்யப்படும். நேர்முகப் பரீட்சையின் போது பின்பற்றப்படும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதும் கட்டமைக்கப்பட்டதுமான புள்ளி வழங்கும் நடவடிக்கைமுறையானது இந்த அறிவித்தலின் 05 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. **தேவையானதகைமைகள்:**
(i) **கல்வித் தகைமைகள், அனுபவம் உட்பட பிற தகைமைகள்.**

| பதவி | கல்வித் தகைமைகள் | அனுபவமும் பிற தகைமைகளும் |
|---|---|---|
| பரீட்சை பரிசோதகர் (பொறியியல்) | இலங்கை அல்லது ஐக்கிய இராச்சியம் அல்லது அவுஸ்திரேலியா அல்லது கனடா அல்லது சீனா அல்லது இந்தியா அல்லது பாகிஸ்தான் அல்லது நியூசிலாந்து அல்லது மலேசியா அல்லது சிங்கப்பூர் அல்லது தென் ஆபிரிக்கா அல்லது அயர்லாந்து ஆகிய நாடுகளில் அல்லது இயைபுள்ள சான்றிதழை ஏற்றுக்கொள்வது சம்பந்தமாக இலங்கையுடன் இருதரப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ள நாடொன்றில் அரசாங்க கப்பற்துறை நிருவாக நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட பிரதான பொறியியலாளர் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் | 3,000 கிலோவோட்டுக்கு அதிகமான ஆற்றலுடைய பிரதான என்ஜின் ஒன்றைக் கொண்ட கடல் பிரயாணத்தில் ஈடுபடும் வணிக கப்பல் ஒன்றில் பிரதான பொறியியலாளராக ஆகக் குறைந்தது இரண்டு (02) வருட கால அனுபவம் இருத்தல். |

***(ii) உடற்தகுதி*** : அபேட்சகர் ஒவ்வொருவரும் இலங்கையில் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கும் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் ஆரோக்கியமும் சிறந்த மனநிலையும் கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

***(iii) வயதெல்லை***.- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்றுக்கு 30 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

***(iv) பிற தகைமைகள்*** :

* விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாய் இருத்தல் வேண்டும்;
* விண்ணப்பதாரர்கள் நற்பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு : விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்றுக்கு விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட சகல தகைமைகளையும் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **பணிக்கமர்த்தல் நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்**:

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதிய திட்டம் சம்பந்தமாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். தாங்கள் விதவைகள்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகைகள் செலுத்த வேண்டும் என்பதோடு அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் விதித்துரைக்கின்றவாறு உதவுதொகையானது செலுத்தப்படுதலும் வேண்டும்.

(ii) இந்த நியமனமானது மூன்று (03) வருட கால தகுதிகூர் காலப்பகுதிக்கு உட்பட்டதாகும். இந்த பதவியின் I ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு ஐந்து (05) வருட காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உள்ளவாறு முதலாம் வினைத்திறமைகாண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 2020.10.16 ஆந் திகதியிடப்பட்டதும் 18/2020 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிருவாக சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக அரச கரும மொழியில் / மொழிகளில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

(iv) இந்த நியமனம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும் அரசாங்க நிதி நியதிக்கும் திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் துறைமுகங்கள் கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் வணிக கப்பல் செயலகத்தின் பணிப்பாளர் (கப்பல்) பதவிக்குரிய ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு ஏற்கனவே செய்யப்பட்டுள்ளதும் எதிர்காலத்தில் செய்யப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

(v) விண்ணப்பிக்கும் மொழி மூலமானது பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாதென்பதோடு, விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் மொழி மூலமானது நியமனத்தைப் பெறுவதற்கு தகைமையுடைய மொழி மூலமாகும்.

4. ***சம்பள அளவுத் திட்டம்*** : இந்தப் பதவிக்கு ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895.00 (மாதாந்த) கொண்ட சம்பள அளவுத் திட்டம் உரியதாவதோடு, இந்த சம்பள அளவுத் திட்டத்தின் 20 ஆம் படிநிலையில் (ரூபா 76,175.00) அமர்த்தி சம்பளம் வழங்கப்படும். (இதற்கு மேலதிகமாக 80,000.00 ரூபாவைக் கொண்ட தொழில்சார் கொடுப்பனவு அடங்கலாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் சிறப்புரிமைகளும் இந்த பதவிக்கு உரித்துடையதாகும்.)

6. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் புள்ளி வழங்கும் திட்டமானது அடிப்படையாகக் கொள்ளப்படும்:-

| தொடர் இல. | | விடயம் | புள்ளிகள் | ஆகக் கூடிய புள்ளி களின் அளவு |
|---|---|---|---|---|
| 01. | **மேலதிகக் கல்வித் தகைமைகள் :** | | | **30** |
| | i. | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து/ நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடல் பொறியியல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு சார்பில் | 30 | |

| தொடர் இல. | | விடயம் | புள்ளிகள் | ஆகக் கூடிய புள்ளி களின் அளவு |
|---|---|---|---|---|
| | ii. | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து/ நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடல் பொறியியல் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா சார்பில் | 20 | |
| | iii. | பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து/ நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடல் பொறியியல், மின் பொறியியல், இயந்திர பொறியியல் மற்றும் கடல் அறிவியல் தொடர்பிலான பட்டம் சார்பில்<br><br>(ஆகக்கூடுதலான தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | 15 | |
| 02. | | **தொழிற் தகைமைகள்** | | **10** |
| | | சமுத்திர கண்காணிப்பு, சமுத்திர சட்டம், ஒழுங்குவிதி, சமுத்திர பரிசோதனை மற்றும் ஆய்வு அல்லது கப்பற்துறை அலுவல்கள் பாதுகாப்புத் தொடர்பிலான சர்வதேச நியமங்கள் போன்ற துறை முகங்களுக்குரியதாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட - | | |
| | i. | ஆறு (06) மாத காலம் அல்லது அதற்கு கூடுதலான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில் | 10 | |
| | ii. | மூன்று (03) மாத காலம் அல்லது அதற்கு கூடுதலான அத்துடன் ஆறு (06) மாதங்களுக்கு குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில் | 07 | |
| | iii. | மூன்று (03) மாத காலத்திற்கு குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில்<br><br>(ஆகக் கூடுதலாக இரண்டு (02) சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படலாம்) | 03 | |
| 03. | | **மேலதிக அனுபவம்** | | **30** |
| | i. | ஆட்சேர்ப்புத் திட்டத்தின் தகைமைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த அனுபவத்திற்கு மேலாகவுள்ள அனுபவ காலம் சார்பில் -<br>- ஆண்டொன்றுக்கு 02 புள்ளிகள் வீதம் ஆகக் கூடுதலாக 30 புள்ளிகள் சார்பில்<br>- ஆறு (06) மாதங்களுக்கு கூடுதலான ஒரு (01) வருடத்துக்கு குறைவான- புள்ளிகள் 02 | 10 | |
| 04. | | **துறைசார்ந்த பங்களிப்பு :** | | **10** |
| | | துறைக்குரியதாக தேசிய அல்லது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் வெளியீடொன்றில் பிரசுரிக்கப்பட்ட வெளியீடொன்று அல்லது புலமை சொத்துடனான புத்தாக்கம் என்பன முறையான/ ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரங்கள் அல்லது சான்றிதழ்கள் மூலம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | 10 | |

| தொடர் இல. | விடயம் | | புள்ளிகள் | ஆகக் கூடிய புள்ளி களின் அளவு |
|---|---|---|---|---|
| 05. | **கணினி ஆற்றல் :** | | | **15** |
| | கடல் பொறியியல், இயந்திர, பொறியியல், கடல் அறிவியல் சார்ந்த கணினி பிரயோகம், கப்பல்/ சமுத்திர விஞ்ஞானம் அல்லது கணினி சார்ந்த பயிற்றுவித்தல் மற்றும் பரீட்சைகளை நடாத்துதல் போன்ற துறைகளுக்குரிய தகவல் தொழில்நுட்ப/ கணினி முறைமை கணினி பிரயோகம் தொடர்பில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட – | | | |
| | i. | ஆறு (06) மாத காலத்திற்கு கூடுதலான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில் | 15 | |
| | ii. | மூன்று (03) மாத காலம் அல்லது அதற்கு கூடுதலான அத்துடன் ஆறு (06) மாதங்களுக்கு குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில் | 10 | |
| | iii. | மூன்று (03) மாத காலத்திற்கு குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கை காலத்துடனான பாடநெறியொன்று சார்பில்<br>(ஆகக் கூடுதலாக இரண்டு (02) சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படலாம்) | 03 | |
| 06. | **நேர்முகப்பரீட்சையில் காட்டும் திறமை சார்பில்** | | | **05** |
| | | **மொத்தம்** | | **100** |

**06. விண்ணப்பதாரர்களின் ஆள் அடையாளம்:**

(i) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவது சகல வித்திலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமாவர்.

(ii) நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழிகளினதும் மூலப்பிரதிகளையும் உரிய முறையில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(iii) நேர்முகப்பரீட்சையின் போது தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் பின்வருன ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

**07. விண்ணப்பிக்கும் முறை :**

(i) விண்ணப்பங்களை 2022, ஒற்றோபர் 01 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

"வணிகக் கப்பல் பணிப்பாளர் அதிபதி,
வணிகக் கப்பல் செயலகம்,
43/89, பிறிஸ்ரல் கட்டிடம்,
1 ஆம் மாடி, யோர்க் வீதி,
கொழும்பு 01".

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரி விண்ணப்பப்படிவமானது இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது . விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பங்களை A4 அளவு தாளொன்றில் தயாரித்து முதலாம் பக்கத்தில் இலக்கம் 01 இலிருந்து 09 வரையும், இரண்டாம் பக்கத்தில் 10 இலிருந்து 15 வரையும் இருக்கக்கூடிய விதத்தில் தயாரித்து தத்தமது கையெழுத்துக்களில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் இட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பரீட்சை பரிசோதகர் (பொறியியல்), பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவரினால்/ சமாதான நீதவான் ஒருவரினால்/ சத்திய ஆணையாளர் ஒருவரினால்/ சட்டத்தரணி ஒருவரினால்/ பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால்/முப்படையைச் சேர்ந்த ஆணைபெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது 03/2016 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு அமைவாக ரூபா 32,807.00 கொண்ட மாதாந்த சம்பளமொன்றைப் பெறும் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்களுடைய விண்ணப்பங்களை தாம் சேவையாற்றும் திணக்களத்தின் திணைக்கள தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் பொறுப்பேற்கப் படமாட்டாது.

08. தங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் உண்மையற்றதென அல்லது பிழையானதென ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் தங்களது அபேட்சக தன்மை இரத்துச் செய்யப்படும். இத்தகைய உண்மையற்ற அல்லது பிழையான தகவல் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் நிரூபிக்கப்பட்டால் அதற்குரியதான நடவடிக்கைமுறைகளுக்கு உட்பட்டு, சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

09. வெற்றிடத்தை நிரப்பும் அல்லது நிரப்பாது விடும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரியதாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

கே. டீ. எஸ். ருவன்சந்திர,
செயலாளர்,
துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு.

துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சு,
இலக்கம் 19, சைத்திய வீதி,
கொழும்பு 01,
2022.08.22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் வணிக கப்பல் செயலகத்தின் ........................................................ பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

| நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் | |
|---|---|

(உரிய இலக்கத்தை இந்த கூட்டினுள் இடவும்- சிங்களம்-4/தமிழ் -2/ஆங்கிலம்-3)

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்துக்கு மாத்திரம்)

குறிப்பு : விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை மாற்ற முடியாது.

---

01. விண்ணப்பதாரரின் பெயர்:

(i) முதலெழுத்துக்கள் இறுதியாக வரும் விதத்தில் முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) : (உ-ம் : GUNAWARDHANA, H. M. S. K.) :...............................................................................................

(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :...............................................................................................

(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :...............................................................................................

02. முகவரியும் தொலைபேசி இலக்கமும் :

(i) அலுவலக முகவரி :...................................................................................................
தொலைபேசி இலக்கம் :..................................................................................................

(ii) பிரத்தியேக முகவரி :.................................................................................................
தொலைபேசி இலக்கம் :..................................................................................................
செல்லிடத் தொலைபேசி இலக்கம் :.................................................................................................

03. பிறந்த திகதி :

ஆண்டு :---- மாதம் :---- திகதி :----.

04. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றுக்கான வயது:

வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.

05. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :.................................................................................................

06. பால் : ஆண்/ பெண் : .................................................................................................

07. திருமணமானவரா/ திருமணமாகாதவரா/ விதவையா :.................................................................................................

08. கல்வித் தகைமைகள் :

| தகைமைகள் | தகைமை பெற்றுக்கொண்ட வருடம் | பாடப்பிரிவு | சித்தி | நிறுவனத்தின் பெயர் | வேறு |
|---|---|---|---|---|---|
| | | | | | |

09. **தொழிற் தகைமைகள் :**

| தகைமைகள் | தகைமை பெற்றுக்கொண்ட வருடம் | பாடப்பிரிவு | சித்தி | நிறுவனத்தின் பெயர் | வேறு |
|---|---|---|---|---|---|
| | | | | | |

10. **அனுபவம் பற்றிய விபரம் (முதலாம் வகுப்பு தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றுக் கொண்டதன் பின்னர்) :**

(அ) நிறுவனம் சார்ந்த அனுபவம் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | இந்தப்பதவிக்குரிய பணிகள் சுருக்கமாக | சேவைக்காலம் | வேறு |
|---|---|---|---|---|
| | | | | |

(அ) கப்பல் தொழில் சார்ந்த அனுபவம் :

| கப்பலின் பெயர் | கப்பலின் ஆற்றல் | கப்பலில் வகித்த பதவி | சேவைக்காலம் (முதலாம் வகுப்பு தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றுக் கொண்டதன் பின்னரான சேவைக்காலத்தை மாத்திரம் குறிப்பிடவும்.) | | வேறு |
|---|---|---|---|---|---|
| | | | மாதம் | நாள் | |
| | | | | | |

11. துறைசார்ந்த பங்களிப்பு :----.
(வெளியீடு மற்றும் புத்தாக்கம்)

12. கணினி ஆற்றல் தொடர்பில் பெற்றுள்ள தேர்ச்சி :
(அ) பட்டம் :----.
(ஆ) டிப்ளோமா :----.
(இ) சான்றிதழ் பாடநெறி :----.

13. தாங்கள் ஏதேனும் குற்றச்சாட்டொன்றிற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? :----.

மேற்குறிப்பிட்ட விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் பிழையற்றவையெனவும் உண்மையானவையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். அதேபோன்று என்னால் உறுதி செய்யப்பட்ட இந்த வெளிப்படுத்தலில் எவையேனும் பிழையானவையென அல்லது உண்மையற்றவையென ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எனது அபேட்சகத் தன்மை நீக்கப்படுமென்பதையும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அதற்கான நடவடிக்கைகளுக்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

14. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................ தனிப்பட்ட வகையில் நான் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் ................................ ஆந் திகதியன்று கையொப்பமிட்டாரெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

15. திணைக்கள தலைவரின்/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் (அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்) :

இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் சேவையாற்றும் திரு./ திருமதி/ செல்வி ............................. ........., தற்போது ................................... பதவியில் கடமையாற்றுகிறாரெனவும், அவருடைய சேவை மற்றும் நடத்தை திருப்திகரமானதெனவும், அவருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று விசாரணையும் இல்லையெனவும் அவ்வாறு செயலாற்றுவதற்கு கருதவில்லையெனவும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் இந்த நிறுவன சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
இலச்சினையும்.

திகதி :----.

## கேடெற் அதிகாரிகள் மற்றும் மாணவ பொலிஸ் அதிகாரிகளுக்கான பட்டப்பயில் நெறிகள் - ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

1. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் இரத்மலானை மற்றும் சூரியவெவ தெற்கு வளாகத்தில், பட்டதாரி கற்கை நெறிகளுக்கு (Undergraduate Cadetships) பொருத்தமான தகைமையுடைய இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 29/ 08/ 2022 ஆம் திகதி முதல் 26/ 09/ 2022 ஆம் திகதி வரை கோரப்படுகின்றன.

2. பட்டப்பயில் நெறிகளுக்கு கல்விசார் மற்றும் இராணுவ/பொலிஸ் கூறுகள் ஆகியவற்றை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு, 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவனச் சட்டம் மற்றும் அதில் மேலும் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றின் பிரகாரம் முப்படை அதிகாரிகள் மற்றும் இலங்கை காவல்துறை மேலதிகாரிகளாக நிலையுயர்த்தப்பட்ட மாணவ பொலிஸ் அதிகாரிகள் முப்படை/ பொலிஸ் நிலையில் உள்ளவர்களுக்கு பட்டங்கள் வழங்குவதற்கு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

3. கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் - இரத்மலானை பல்கலைக்கழகத்தினால் பின்வரும் பட்டதாரி கற்கை நெறிகள் வளங்கப்படுகின்றன.

i. மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சையியல்மாணி சிறப்புப்பட்டம் (MBBS) (5 ஆண்டுகள்);
ii. பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம் (4 ஆண்டுகள்);
iii. மென்பொருள் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம். (4 ஆண்டுகள்);
iv. தேவைகள் விநியோகங்கள் முகாமைத்துவ விஞ்ஞானமாணி பட்டம் (3 ஆண்டுகள்);
v. முகாமைத்துவ மற்றும் தொழிநுட்பம் விஞ்ஞானமாணி பட்டம் (3 ஆண்டுகள்);
vi. சமூக விஞ்ஞானங்கள் விஞ்ஞானமாணி பட்டம் (3 ஆண்டுகள்);
vii. பிற மொழிகளை பேசுபவர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதில் இளங்கலைப்பட்டம் (TESOL) (3 ஆண்டுகள்);
viii. தந்திரோபாயக் கற்கைகள், சர்வதேச உறவுகளில் விஞ்ஞானமாணி பட்டம் (3 ஆண்டுகள்);
ix. கட்டுமான தொழில்நுட்பவியலில் பொறியியல் தொழில்நுட்பமாணி சிறப்புப் பட்டம் (4 ஆண்டுகள்);
x. பொலிஸ் அறிவியலில் விஞ்ஞானமாணி பட்டம் (3 ஆண்டுகள்);
xi. குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதியில் விஞ்ஞானமாணி பட்டம் (3 ஆண்டுகள்).

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் - சூரியவெவ தெற்கு வளாகத்தினால் பின்வரும் பட்டதாரி கற்கை நெறிகள் வளங்கப்படுகின்றன.

xii. கட்டிட கலையியல்மாணி சிறப்புப் பட்டம் (5 ஆண்டுகள்);
xiii. கணிய அளவையியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் - (4 ஆண்டுகள்);
xiv. அளவையியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (4 ஆண்டுகள்);
xv. தகவல் தொழிநுட்பம் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம் (4 ஆண்டுகள்) ;
xvi. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் தொழிநுட்ப இளங்கலை சிறப்புப்பட்டம் (4 ஆண்டுகள்).

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் - இரத்மலானை பல்கலைக்கழகத்தினால் பொலிஸ்படை மாணவ அதிகாரிகளுக்காக பின்வரும் பட்டதாரி கற்கை நெறிகள் வளங்கப்படுகின்றன.

i. மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சையியல்மாணி சிறப்புப்பட்டம் (MBBS) (5 ஆண்டுகள்)

3.1. பட்டதாரி பாடநெறிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்படும் பயிலிளவல் (Cadet) அதிகாரிகள் மற்றும் பொலிஸ்படை மாணவ அதிகாரிகளுக்கான ஒதுக்கீடானது அப்படை பிரிவுகளில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் தெரிவுக்காக நடாத்தப்படும் மூன்று நேர்முகப்பரீட்சைகளில் அபேட்சகர்கள் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக முடித்துக்கொண்ட பின்னர் பயிலிளவல் (Cadet) அதிகாரிகள் இலங்கை தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றின் கிரமமான படைகளில் இணைத்துக்கொள்ளப்படுவதுடன் மாணவ பொலிஸ் அதிகாரிகள் இலங்கை காவல்துறை மேலதிகாரிகளாக தரமுயர்த்தப்படுவர்.

3.2. பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான கற்கைகளின் கல்விசார் மற்றும் இராணுவ கூறுகள் ஆகியவற்றை வெற்றிகரமாக முடிக்கின்ற பயிலிளவல் (Cadet) மற்றும் மாணவ பொலிஸ் அதிகாரிகளுக்கு பின்வரும் பட்டமொன்று வழங்கப்படும்.

i. மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சையியல்மாணிச் சிறப்புப் (MBBS) பட்டம் ;
ii. பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம்;
iii. மென்பொருள் பொறியியல்மாணி சிறப்புப்பட்டம்;
iv. தேவைகள் விநியோகங்கள் முகாமைத்துவத்துவ விஞ்ஞானமாணி பட்டம்;
v. முகாமைத்துவ மற்றும் தொழிநுட்ப விஞ்ஞானமாணி;
vi. சமூக விஞ்ஞானங்கள் விஞ்ஞானமாணி பட்டம்;
vii. பிற மொழிகளை பேசுபவர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதில் இளங்கலைப்பட்டம் (TESOL) ;
viii. தந்திரோபாயக் கற்கைகள், சர்வதேச உறவுகளில் விஞ்ஞானமாணி பட்டம்;
ix. கட்டுமான தொழில்நுட்பவியலில் பொறியியல் தொழில்நுட்பமாணிச் சிறப்புப் பட்டம்;
x. பொலிஸ் அறிவியலில் விஞ்ஞானமாணி பட்டம்;
xi. குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதியில் விஞ்ஞானமாணி பட்டம்;
xii. கட்டிட கலையியல்மாணிச் சிறப்புப் பட்டம்;
xiii. கணிய அளவையியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் ;
xiv. அளவையியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்;
xv. தகவல் தொழிநுட்பம் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம்;
xvi. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் தொழிநுட்ப இளங்கலை சிறப்புப்பட்டம்.

3.3. சகல பாடநெறிகளும் ஆங்கில மொழியில் மாத்திரமே நடாத்தப்படும்.

3.4. தெரிவுசெய்யப்படும் படையினர் அவர்களின் தகைமைகளுக்கேற்ப பின்வரும் இளமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் ஒன்றைப் பயில்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

3.4.1. மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சையியல்மாணி (MBBS) - ஐந்து ஆண்டுகள் (ஆண், பெண்)

2021 ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் (உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல்) கற்று குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளும் (C) ஒரு சாதாரண (S) சித்தி அல்லது கேம்பிறிட்ஜ /எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று திறமைச்சித்திகள் (C) அல்லது அதற்குச் சமமான சித்திகளையுடையவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

கேம்பிறிட்ஜ்/எடெக்செல் அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு தகைமைகளில் நடப்பாண்டு அல்லது அதற்கு நேர் முன்னய ஆண்டின் (2020) உயர்தராதர பரீட்சை முடிவுகள் MBBS கற்கை நெறிகளுக்கு கருத்திலெடுக்கப்படும். எவ்வாறாயினும் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு தகைமைகளில் நடப்பாண்டிற்கு நேர் முன்னய ஆண்டின் (2020) உயர்தராதர பரீட்சை முடிவுகள் 17 வயதில் முடித்திருந்தால் மட்டுமே கருத்திலெடுக்கப்படும்.

3.4.2 விமான இயந்திரவியல்/விமானம்சார் கற்கை/ உயிரியல் மருத்துவம் /சிவில் / மின் மற்றும் இலத்திரனியல்/இலத்திரனிணல் மற்றும் தொலைத்தொடர்பு/ கடல்சார் / பொறிமுறையெந்திரவியல் / எந்திர இலத்திரனியல் /கடற்படை கட்டிடக்கலை /கட்டிட சேவைகள் என்வற்றில் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் - நான்கு ஆண்டுகள், (ஆண், பெண்)

2021 அல்லது 2020 ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் (இணைந்த கணிதம், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல்) கற்று குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளும் (C) ஒரு சாதாரண (S) சித்தி அல்லது 2022 அல்லது 2021 ஆண்டில் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது இரண்டு அதிதிறமைச் சித்திகள் (B) ஒரு திறமைச் சித்தி(C) அல்லது அதற்குச் சமமான சித்திகளையுடையவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

3.4.3 மென்பொருள் பொறியியல்மாணி சிறப்புப்பட்டம்.- நான்கு ஆண்டுகள், (ஆண்)

2021 அல்லது 2020 ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகள் அல்லது 2022 அல்லது 2021 ஆண்டில் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான தகுதியில் இணைந்த கணிதம், பௌதிகவியல் என்பவற்றிலும் சித்தியுடன் பின்வரும் பாடங்களுள் ஏதேனும் ஒரு பாடத்தில் சித்தியுடன் உள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.
இரசாயனவியல்
உயர் கணிதம்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம்

3.4.4 தேவைகள் விநியோகங்கள் முகாமைத்துவ விஞ்ஞானமாணிப் பட்டம் - மூன்று ஆண்டுகள், (ஆண், பெண்)

2021 அல்லது 2020 ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் உயிரியல், கணிதம் அல்லது வர்த்தகப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகள் அல்லது 2022 அல்லது 2021 ஆம் ஆண்டின் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான சித்தியுடன் உள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

3.4.5 முகாமைத்துவ மற்றும் தொழிநுட்ப விஞ்ஞானமாணி - மூன்று ஆண்டுகள், (ஆண், பெண்)

2021 அல்லது 2020 ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் உயிரியல் அல்லது கணிதம் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகள் அல்லது 2022 அல்லது 2021 ஆம் ஆண்டின் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான சித்தியுடன் உள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

3.4.6 சமூக விஞ்ஞானங்கள் விஞ்ஞானமாணி - மூன்று ஆண்டுகள், (ஆண், பெண்)

2021 அல்லது 2020 ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் எந்தவொரு கற்கைப் பிரிவிலாவது கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகள் அல்லது கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான சித்தியுடன் உள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

3.4.7 பிற மொழிகளை பேசுபவர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதில் இளங்கலைப்பட்டம் (TESOL) – நான்கு ஆண்டுகள், (ஆண், பெண்)

2021 அல்லது 2020 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் எந்தவொரு கற்கைப் பிரிவிலாவது கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகள் அல்லது 2022 அல்லது 2021 ஆம் ஆண்டின் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான சித்தியுடன் உள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும். மேலும் பரீட்சார்த்தி க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியைப் (B) பெற்றிருத்தல் வேண்டும்

3.4.8 தந்திரோபாயக் கற்கைகள், சர்வதேச உறவுகளில் விஞ்ஞானமாணி, மூன்று ஆண்டுகள், (ஆண், பெண்)

2021 அல்லது 2020 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் எந்தவொரு கற்கைப் பிரிவிலாவது கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகள் அல்லது 2022 அல்லது 2021 ஆம் ஆண்டின் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான சித்தியுடன் உள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

3.4.9 கட்டுமான தொழில்நுட்பவியலில் பொறியியல் தொழில்நுட்பமாணி சிறப்புப் பட்டம் , நான்கு ஆண்டுகள், (ஆண்)

2021 அல்லது 2020 ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் (இணைந்த கணிதம், பௌதிகவியல் இரசாயனவியல்) அல்லது தொழிநுட்ப பிரிவில் (பொறியியல் தொழிநுட்பம், விஞ்ஞானத் தொழிநுட்பம் மற்றும் ஏனைய ஒரு பாடம்) குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்தியுடன் அல்லது 2022 அல்லது 2021 ஆம் ஆண்டின் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

இத்தகைமைகளுடன் பரீட்சார்த்திகள் கீழே குறிப்பிடப்படும் தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

க.பொ.த. (சா./த.) பரீட்சையில் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் (C) சித்தி

அல்லது

கேம்பிறிட்ஜ்/எடெக்செல் சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடத்தில் சாதாரண (D) சித்தி.

3.4.10 பொலிஸ் அறிவியலில் விஞ்ஞானமாணி பட்டம் , மூன்று ஆண்டுகள், (ஆண்)

2021 அல்லது 2020 ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்தியுடன் அல்லது 2022 அல்லது 2021 ஆம் ஆண்டின் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

பின்வரும் பாடங்களுள் குறைந்தபட்சம் பட்டியல் (அ) இலிருந்து மூன்று பாடங்களில் அல்லது இரண்டு பாடங்கள் பட்டியல் (அ) இலிருந்தும் ஏதாவது ஒரு பாடம் பட்டியல் (ஆ) இலிருந்தும் சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும்.

**பட்டியல் (அ)**

| | |
|---|---|
| கணக்கியல் | பௌதீகவியல் |
| புவியியல் | கணிதவியல் /இணைந்த கணிதம் |
| வணிக புள்ளிவிபரவியல் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| அளவையியலும் விஞ்ஞான முறையும் | விவசாய விஞ்ஞானம் |
| ,இரசாயனவியல் | உயர் கணிதம் |
| தொடர்பாடலும் ஊடக கற்கைகளும் | வணிக கற்கைகள் |
| அரசறிவியல் | பொருளியல் |
| உயிரியல் | வரலாறு |

அல்லது

**பட்டியல் (ஆ)**

| | |
|---|---|
| பௌத்தம் /பௌத்த நாகரிகம், | இஸ்லாம் / இஸ்லாமிய நாகரிகம் |
| கிறிஸ்தவம் /கிறிஸ்தவ நாகரிகம் | சீன மொழி, |
| கிரேக்க உரோம நாகரிகம் | பாளி |
| ஜப்பான் மொழி | ஜேர்மன் மொழி |
| ஆங்கிலம் (பாட எண்: 73) | தமிழ் |
| சமஸ்கிருதம் | பிராஞ்சிய மொழி |
| இந்து சமயம் / இந்து நாகரிகம் | சிங்களம் |
| அராபிய மொழி | |

அத்துடன்

க.பொ.த. (சா./த.) பரீட்சையில் சிங்களத்தில்/ தமிழில் திறமைச் சித்தியைப் (C) பெற்றிருத்தல் வேண்டும்.

3.4.11 குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதியில் விஞ்ஞானமாணி பட்டம் , மூன்று ஆண்டுகள், (ஆண்)

2021 அல்லது 2020 ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்தியுடன் அல்லது 2022 அல்லது 2021 ஆம் ஆண்டின் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

பின்வரும் பாடங்களுள் குறைந்தபட்சம் பட்டியல் (அ) இலிருந்து மூன்று பாடங்களில் அல்லது இரண்டு பாடங்கள் பட்டியல் (அ) இலிருந்தும் ஏதாவது ஒரு பாடம் பட்டியல் (ஆ) இலிருந்தும் சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும்.

பட்டியல் (அ)

| | |
|---|---|
| கணக்கியல் | பௌதீகவியல் |
| புவியியல் | கணிதவியல் /இணைந்த கணிதம் |
| வணிக புள்ளிவிபரவியல் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| அளவையியலும் விஞ்ஞான முறையும் | விவசாய விஞ்ஞானம் |
| இரசாயனவியல் | உயர் கணிதம் |
| தொடர்பாடலும் ஊடக கற்கைகளும் | வணிக கற்கைகள் |
| அரசறிவியல் | பொருளியல் |
| உயிரியல் | வரலாறு |

அல்லது

பட்டியல் (ஆ)

| | |
|---|---|
| பௌத்தம் /பௌத்த நாகரிகம், | இஸ்லாம் / இஸ்லாமிய நாகரிகம் |
| கிறிஸ்தவம் /கிறிஸ்தவ நாகரிகம் | சீன மொழி, |
| கிரேக்க உரோம நாகரிகம் | பாளி |
| ஜப்பான் மொழி | ஜேர்மன் மொழி |
| ஆங்கிலம் (பாட எண்: 73) | தமிழ் |
| சமஸ்கிருதம் | பிராஞ்சிய மொழி |
| இந்து சமயம் / இந்து நாகரிகம் | சிங்களம் |
| அராபிய மொழி | |

அத்துடன்

க.பொ.த. (சா./த.) பரீட்சையில் சிங்களத்தில்/ தமிழில் திறமைச் சித்தியைப் (C) பெற்றிருத்தல் வேண்டும்.

3.4.12 கட்டிட கலையியல்மாணி சிறப்புப் பட்டம் (B Arch) - ஐந்து வருடங்கள், (ஆண்)

2021 அல்லது 2020 ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் பின்வரும் பாடங்களுள் மூன்று பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகள் அல்லது 2022 அல்லது 2021 ஆம் ஆண்டின் கேம்பிறிட்ஜ்/ எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான சித்தியுடன் உள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

i. பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு பாடம்
உயிரியல்
உயர் கணிதம்
இரசாயனவியல்
பௌதீகவியல்
இணைந்த கணிதம்
சித்திரம்
புவியியல்

அத்துடன்

ii. எஞ்சியிருக்கும் பாடம் /பாடங்கள் பின்வரும் பட்டியலிலுள்ளன.

| | |
|---|---|
| கணக்கியல், | அளவையியலும் விஞ்ஞான முறையும் |
| இந்து நாகரிகம் | கணிதவியல் |
| வணிக புள்ளிவிபரவியல், | சமஸ்கிருதம் |
| இஸ்லாமிய நாகரிகம் | ஜேர்மன் மொழி |
| கிரேக்க உரோம நாகரிகம் | அரபிய மொழி |
| அரசறிவியல் | வரலாறு |
| ஆங்கிலம் (பாட எண்: 73) | வியாபாரக் கற்கைகள் |
| சிங்களம் | ஜப்பான் மொழி |
| கிறிஸ்தவ நாகரிகம் | பொருளியல் |
| தொடர்பாடலும் ஊடக கற்கைகளும் | பாளி |
| ஹிந்தி | பிராஞ்சிய மொழி |
| பௌத்த நாகரிகம் | தமிழ் |
| மனைப்பொருளியல் | சீன மொழி |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் | விவசாய விஞ்ஞானம் |

அத்துடன்

iii. க.பொ.த (சா./த.) பரீட்சையில் கணிதத்தில் திறமைச்சித்தி (C) அல்லது க.பொ.த (உ./த.) பரீட்சையில் கணிதத்தில் சாதாரண சித்தி (S) அல்லது கேம்பிறிட்ஜ்/எடெக்செல் சாதாரண தரத்தில் கணிதத்தில் சாதாரண (D) அல்லது அதற்குச் சமமான சித்தி.

iv. கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினால் நாடாத்தப்படுகிற 'வெளி அறிகைநிலை' எனும் பரீட்சையில் சித்தி.

3.4.13 கணிய அளவையியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்- நான்கு ஆண்டுகள், (ஆண்)

2021 அல்லது 2020 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் பின்வரும் பாடங்களுள் மூன்று (3) பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகள் அல்லது 2022 அல்லது 2021 ஆம் ஆண்டின் கேம்பிறிட்ஜ்/ எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான சித்தியுடன் உள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

பின்வரும் பாடங்களில் ஆகக் குறைந்தது ஏதாவது ஒரு பாடத்தில் சித்தி,

இணைந்த கணிதம் / உயர் கணிதம்

அத்துடன், கீழே குறிப்பிடப்படும் பட்டியலிலிருந்து ஏனைய பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்

| | |
|---|---|
| கணக்கியல் | பொருளியல் |
| வணிகப் புள்ளிவிபரவியல் | பௌதிகவியல் |
| வியாபாரக் கற்கைகள் | இரசாயனவியல் |
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் | |

இத்தகைமைகளுடன் பரீட்சார்த்திகள் கீழே குறிப்பிடப்படும் தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

க.பொ.த. (சா./த.) பரீட்சையில் கணித பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் (C) சித்தி மற்றும் விஞ்ஞான பாடத்தில் சாதாரண (S) சித்தி

அல்லது

கேம்பிறிட்ஜ்/எடெக்செல் சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடத்தில் சாதாரண (D) சித்தி.

3.4.14 அளவையியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் -நான்கு ஆண்டுகள், (ஆண்)

2021 அல்லது 2020 ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகள் அல்லது 2022 அல்லது 2021 ஆம் ஆண்டின் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான தகுதியுடன் இணைந்த கணிதம், பௌதிகவியல் என்பவற்றில் சித்தியுடன் பின்வரும் பாடங்களுள் ஏதேனும் ஒரு பாடத்தில் சித்தி உள்ளவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

இரசாயனவியல்
உயர் கணிதம்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம்

3.4.15 தகவல் தொழிநுட்பம் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம்- நான்கு ஆண்டுகள், (ஆண்)

2021 அல்லது 2020 ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் தொழிநுட்ப துறை பிரிவு தவிர்ந்த ஏதாவதொரு பாடப் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்தியுடன் அல்லது கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

3.4.16 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் தொழிநுட்ப இளங்கலை சிறப்புப்பட்டம்- நான்கு ஆண்டுகள், (ஆண்)

2021 அல்லது 2020 ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் (இணைந்த கணிதம், பௌதிகவியல் இரசாயனவியல்) அல்லது உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் (உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல்)

அல்லது தொழிநுட்ப பிரிவில் (பொறியியல் தொழிநுட்பம், விஞ்ஞானத் தொழிநுட்பம் மற்றும் ஏனைய ஒரு பாடம்) குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்தியுடன் அல்லது 2022 அல்லது 2021 ஆம் ஆண்டின் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் ஆகக் குறைந்தது மூன்று சாதாரண (D) சித்திகள் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

3.5. தெரிவுசெய்யப்பட்ட பயிலிளவல்கள் (Cadets) அப்பாடநெறிகளுக்குரிய பொதுவான பாடங்களுக்கு மேலதிகமாக அந்தந்த பாடநெறிகளுக்கு பிரயோகிக்கத்தக்கதாக ஆங்கிலம், முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், சட்டம், சர்வதேச கற்கைகள் மற்றும் இராணுவ கற்கைகள் முதலிய பாடங்களை கட்டாயமாக பயிலுதல் வேண்டும்.

3.6. அத்துடன் இவர்கள் தமது கற்கைநெறிகளின் போது உடல்வாண்மை விருத்தி, தேகாப்பியாசம், ஆயுதப் பயிற்சி மற்றும் தலைமைத்துவம் ஆகியவற்றில் தொடர்ச்சியான பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

4. 4.1 பயிலிளவல் (Cadets) அதிகாரிகள் மற்றும் மாணவ பொலிஸ் அதிகாரிகளுக்கு தேவையான அடிப்படைத் தகைமைகள்.

அபேட்சகர்:

i. இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும்.
ii. 26.09.2022 ஆம் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 22 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
iii. க.பொ.த. (உ./த.) பொது அறிவுப் பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் (குறைந்தது 30 புள்ளிகள்) வேண்டும்.
iv. இலங்கையில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.
v. திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் (எந்தவொரு பயிலிளவலும் பயிற்சியின் கீழ் உள்ள காலப்பகுதியில் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதுடன் படை சேவை ஒழுங்கு விதிகளின் கீழ் அவ்வாறு செய்வதற்கு அனுமதி அளிக்கப்படும் வரையும் அவர்கள் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்)

4.2 ஏனைய தேவையான தகைமைகள்

i. அனைத்து கற்கைகளுக்கும் (TESOL தவிர்ந்த) ஆங்கில மொழி பாடத்தில் க.பொ.த. (சா./த.) பரீட்சையில் அல்லது கேம்பிறிட்ஜ்/எடெக்செல் சாதாரண தரத்தில் குறைந்தபட்சம் திறமைச் சித்தியை (C) பெற்றிருத்தல் கட்டாயமானதாகும். பிற மொழிகளை பேசுபவர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதில் இளங்கலைப்பட்ட (TESOL) கற்கைக்கு பரீட்சார்த்தி க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் அதிதிறமைச் சித்தியைப் (B) பெற்றிருத்தல் வேண்டும்.

ii. இலங்கை வான்படைக்குரிய கல்வித் தகைமைகள்.-
ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் என்பற்றில் திறமைச் சித்தியும் சிங்களம் அல்லது தமிழில் சாதாரண சித்தியும் அடங்கலாக ஒரு அமர்வில் ஆறு கட்டாய பாடங்களில் திறமைச் சித்தி (C) பெற்றிருத்தல் வேண்டும். (மேலதிக மற்றும் தெரிவுப் பாடங்கள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது). மேலும் சட்டமாணி சிறப்புப்பட்டத்தை பயில்வதற்கு க.பொ.த. (சா./த.) பரீட்சையில் சிங்களத்தில்/ தமிழில் திறமைச் சித்தியைப் (C) பெற்றிருத்தல் வேண்டும்.

iii. கேம்பிறிட்ஜ்/எடெக்செல் அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு தகைமைகளைக் கொண்டிருக்கிற விண்ணப்பதாரிகள் இலங்கை க.பொ.த. (சா./தரத்தில்) சிங்களம் அல்லது தமிழ் மொழியில் திறமைச் சித்தியைக் (C) கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பம் சமர்ப்பிக்கின்றபோது உள்நாட்டு க. பொ. த. சா. தரத்தில் தோற்றாத விண்ணப்பதாரிகள் பயிலிளவலாக/மாணவ பொலிஸ்-அலுவலராக சேர்க்கப்பட்டு இரண்டு வருடங்களுக்குள் சிங்களம் அல்லது தழிழ் மொழியில் திறமைச் சித்தியைப் (C) பெறுதல் வேண்டும். இத்தேவையை குறித்த காலப்பகுதியில் பூர்த்தி செய்யத் தவறும் விண்ணப்பதாரி அவரது சேவையிலிருந்து/ இலங்கை பொலிஸ் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

*4.3* **குறைந்தபட்சம் பின்வரும் உடல் அளவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:**

| | | இராணுவம் | | கடற்படை | | வான்படை | | பொலிஸ் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| உயரம் | MBBS | 5' 6" | 5' 3" | 168 cm | 160 cm | 5' 5" (165 cm) | 5' 3" (160 cm) | 5’ 6” | 5’ 3” |
| | ஏனைய பட்டங்கள் | 5' 6" | 5' 3" | 168 cm (171 cm for Provost Branch) | 160 cm (163 cm for Provost Branch) | 5'6" (167.5 cm) | 5'4" (162.5 cm) | - | - |
| நிறை | | 50 Kg | 5' 6" | 5' 3" | 168 cm | 160 cm | 5' 5" (165 cm) | 5' 3" (160 cm) | 5’ 6” |
| BMI | | - | - | - | - | <26 and >17 | <25 and >17 | - | - |
| மார்பு | | 32" (விரிவடையாதது) | - | 81 cm | - | 32" (81 cm) | - | 32" (81 cm | - |

| பார்வை | | இராணுவம் | | | கடற்படை | | | வான்படை | | | பொலிஸ் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | L | R | CP | L | R | CV | L | R | CP | L | R | CP |
| தொழில் முறை வகை | கண்ணாடி இன்றி | 6/18 | 6/18 | CP 2 | 6/18 | 6/18 | 24/24 By Ishihara’s plates | 6/18 | 6/18 | CP 2 | 6/18 | 6/18 | CP 2 |
| | திருத்தப்பட்ட பார்வை | 6/6 | 6/6 | CP 2 | - | - | - | 6/6 | 6/6 | CP 2 | 6/6 | 6/6 | CP 2 |
| | கண்ணாடி உடன் | - | - | - | 6/6 | 6/6 | 24/24 By Ishihara’s plates | - | - | - | | | |
| | அண்மைய பார்வை | - | - | - | J – 01 (Sinhala) N – 08 (English) | | | - | - | - | - | - | - |
| ஏனைய வகை | கண்ணாடி இன்றி | 6/9 | 6/6 | CP 2 | 6/6 | 6/6 | CP 2 | 6/6 | 6/6 | CP 2 | - | - | - |

**தொழில்முறை வகையில் உள்ளடங்கும் பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

| *சேவை* | *பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்* |
|---|---|
| இராணுவம் | மருத்துவம் (MBBS), பொறியியல் BSc Eng |
| கடற்படை | மருத்துவம் (MBBS) |
| வான்படை | மருத்துவம் (MBBS) |
| பொலிஸ் | மருத்துவம் (MBBS) |

**ஏனைய வகையில் உள்ளடங்கும் கற்கை நெறிகள் :**

- *ஏனைய அனைத்து கற்கை நெறிகள்*

*விசேட குறிப்பு: ஒரு விண்ணப்பதாரி* U – 17/ U – 19 *அல்லது விளையாட்டில் தேசிய வர்ணவிருது அல்லது ஜனாதிபதி சாரணியம்/பிரதம மந்திரி வழிகாட்டி/கீழ் பயிலிளவல் அதிகாரிகள் (சிரேஸ்ட/கனிஸ்ட) பயிலிளவல் சார்ஜன்/நிலைகளிலொன்றைக் கொண்டிருந்தால் முகாமைத்துவ சபை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் இறுதி நேர்முகப்பரீட்சை குழுவினால் மேற்படி உடலளவு நியமங்கள் தளர்த்தப்படலாம்.*

*ஒரு விண்ணப்பதாரி தேசிய மட்ட விளையாட்டில்* U – 17/ U – 19 *அவர் பின்வரும் வகையில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்*

*தனிநபர் போட்டி - முதல்/இரண்டாம்/ மூன்றாம் இடங்கள்*
*குழுநிலைப் போட்டி - வெற்றியாளர் / இரண்டாம் இடம்*

**க.பொ.த உயர்தர பரீட்சையில் ஒரு விண்ணப்பதாரி 1.80 அல்லது அதற்கு மேல் இஸட்* (Z-Score) *புள்ளிகளைக் கொண்டிருந்து* MBBS *அல்லது பொறியியல் கற்கைக்கு விண்ணப்பித்தால் ஆண்களினது உயரம் 5'4" அல்லது அதற்கு மேலெனவும் பெண்களது உயரம் 5' 2" அல்லது அதற்கு மேலெனவும் தளர்த்தப்படும்.*

**ஒரு விண்ணப்பதாரி தான்சார்ந்த சேவைத்துறையினதும்/இலங்கை பொலிஸினதும் பார்வைசார் தேவையினை பூர்த்தி செய்ய வேண்டும்.*

4.4 *பரீட்சார்த்தி அவசியப்படும் மருத்துவ நியமங்களை உறுதிப்படுத்த வேண்டும்* - பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக முகாமைத்துவச் சபையின் தலைவரின் திருப்திக்கு ஏற்ப கொடுக்கப்பட்ட மாதிரிக்கமைய உடல்நலச் சாற்றுரை படிவத்தை சமர்ப்பித்தன் பின்னர், மருத்துவ சோதனையில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பதாரியொருவர் மருத்துவப் பிரகடனப் படிவத்தில் பொய்யான தகவல்களை அளித்துள்ளார் என தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு தெரியவந்தால், அவர் தகுதியற்றவராக்கப்படுவதுடன் பொய்யான தகவல்களை வழங்கியமை எனும் விதியின் கீழ் தண்டனைக்குரியவராவார். மருத்துவப் பிரகடனப் படிவத்தை பல்கலைக்கழக இணையத்தளத்தில் இருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். https://www.kdu.ac.lk

5. *சேவை நிபந்தனைகள்.-* தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர்கள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், இரத்மலானை அல்லது சூரியவெவ தெற்கு வளாக பயிலிளவல் (Officer Cadets) அதிகாரிகளாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அவர்கள் 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவனச் சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்கள் ஆகியவற்றின் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் ஆகியவற்றுக்கு கட்டுப்பட்டவர்கள். தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகள் கிரமமான படைகளில் இணைப்புச் செய்யப்பட்ட மற்றும் சம்பந்தப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் சேவையில் அதிகாரி பதவிக்கு அமர்ததப்பட்ட தினத்திலிருந்து தொடர்ச்சியானதும் இடையறாததுமான பன்னிரெண்டு (12) வருடங்களுக்கு குறையாத கட்டாயமான காலப்பகுதி சேவையாற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும், மருத்துவ (MBBS) பட்டத்திற்காக தெரிவு செய்யப்படுகிற பயிலிளவல்கள் அவர்கள் சேவையில் அதிகாரி பதவிக்கு அமர்த்தப்பட்ட தினத்திலிருந்து தொடர்ச்சியானதும் இடையறாததுமான (20) இருபது வருட சேவையை அவர்கள் அமர்த்தப்படுகிற படைத்துறைக்கு சேவையாற்ற வேண்டும். மருத்துவ (MBBS) பட்டத்திற்காக தெரிவு செய்யப்படுகிற ஒரு பொலிஸ் மாணவ அதிகாரி அவர் பொலிஸ் சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட தினத்திலிருந்து தொடர்ச்சியானதும் இடையறாததுமான (20) இருபது வருட சேவையை வழங்க வேண்டும்.

கல்விக் காலத்தில் மருத்துவ பின்னணி மற்றும் ஏனைய காரணிகளின் நிமித்தம் விடுவிப்போருக்கு பட்டம் வழங்கப்பட மாட்டாது.

6. பல்கலைக்கழக அனுமதிக்கப்படும் நேரத்தில் பரீட்சார்த்திகள் மேற்கூறியபடி குறித்த பட்டத்தைப் பெற்ற பின்னர் குறித்த காலப்பகுதியில் கட்டாய சேவை செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுடன் பிணையொன்றையும் உடன்படிக்கையொன்றையும் செய்துகொள்ளல் வேண்டும்.

7. பயிலிளவல் (Cadets) அதிகாரிகளுக்கு/மாணவ பொலிஸ் அதிகாரிகளுக்கு மாதமொன்றுக்கு அண்ணளவாக ரூ. 45,000.00 கொண்ட சம்பளமும் படியும் கொடுக்கப்படும். இதற்கு மேலதிகமாக, கட்டணமின்றி பின்வரும் வசதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்:

(i) *உணவு மற்றும் தங்குமிடம்*
(ii) *சீருடைகள்*
(iii) *அதிகாரியின் வேலையாள் வசதிகள்*

(iv) விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்
(v) மருத்துவ வசதிகள்

மாணவ பொலிஸ் அதிகாரி களுக்கு மாதமொன்றுக்கான சம்பளமும் உரித்தான படியும் விதிமுறை தரநிலைக்கு அமைவாக கொடுக்கப்படும். இதற்கு மேலதிகமாக, கட்டணமின்றிய பின்வரும் வசதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்:

(i) உணவு மற்றும் தங்குமிடம்
(ii) சீருடைகள்
(iii) தொழிலாளர் வசதிகள்
(iv) விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்
(v) மருத்துவ வசதிகள்

8. இலங்கைத் தரைப்படை, கடற்படை, விமானப் படைகளின் கிரமமான சேவை மற்றும் இலங்கை பொலிஸ் மேலாலர் சேவைக்கு இணைக்கப்படுமிடத்து, சேவைக் கொடுப்பனவு சட்டக்கோவையின் பிரகாரம் வரிசைப் பதவிக்கு பிரயோகிக்கத்தக்க சம்பளமும் படியும் அவர்களுக்கு இலங்கை பொலிஸ் கொடுப்பனவு செய்யப்படும்:

(அ) பின்வரும் படிகள் மாதாந்தம் கொடுப்பனவு செய்யப்படும்:

(i) தகைமைப் படி
(ii) பங்கீட்டுப்படி (மாணவ பொலிஸ் அலுவலருக்கு பொருத்தமற்றது)
(iii) 'உள்ளே வாழுமாறு' கட்டளையிடப்பட்டவர்களுக்கான படி
(திருமணமான அதிகாரிகள்களுக்கு மட்டும்)
(iv) சீருடை பராமரிப்புப் படி

(ஆ) வேறு வசதிகளும் கொடுப்பனவுகளும்:

(i) உள்ளே வாழுமாறு' கட்டளையிடும்போது இலவச தங்குமிடவசதி
(ii) வாடகை வீட்டில் வசிப்பதாயின் வரையறுக்கப்பட்ட வாடகைப்படி
(iii) சீருடைப் படி
(iv) திருமணமாகாத அதிகாரிகளுக்கான வேலையாள் கொடுப்பனவும் திருமணமான அதிகாரிகளுக்கான வேலையாள் சேவைகளும்.
(மாணவ பொலிஸ் அலுவலருக்கு பொருத்தமற்றது)

9. இராணுவம் / கடற்படை / விமானப்படை மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் கொடுப்பனவு மற்றும் சேவை நிபந்தனைகள் பின்வரும் விதிமுறைகளால் கையாளப்படும்.:

(i) தரைப்படை/ கடற்படை/விமானப்படை.

(ii) இலங்கைஅரசாங்கவர்த்தமானியில்பிரசுரிக்கப்பட்டதரைப்படை/கடற்படை/விமானப்படை/உத்தியோகத்தர்களுக்கான நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகள்.

(iii) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தரைப்படை/கடற்படை/ விமானப் படையின் நடைமுறையிலான ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைகள் சட்டக்கோவை.

(iv) பொலிஸ் அலுவலருக்கான சம்பளமானது பொலிஸின் விதிமுறை தரநிலை (SOR) சம்பளக் கோவை மற்றும் பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக கையாளப்படும்.

(v) பொலிஸ் அலுவலருக்கான ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைகள் பொது நிர்வாக சுற்றறிக்கைகளுக்கு அமைவாக கையாளப்படும்.

10. பயிற்சி காலத்தின் போது உபவேந்தர் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் மற்றும் அல்லது சம்பந்தப்பட்ட படைத் தளபதிகள் /அல்லது பொலிஸ் இன்ஸ்பெக்டர் நாயகத்தினால் பரிந்துரைக்கப்படும் பயிற்சிகளை பயிலிளவல் (Cadets) உத்தியோகத்தர்கள்/ மாணவ பொலிஸ் உத்தியோகத்தர்கள் பெற வேண்டும்.

11. பயிற்சியின் கீழுள்ள பயிலிளவல் (Cadets) அதிகாரிகள் / மாணவ பொலிஸ் உத்தியோகத்தர்கள் இலங்கையின் அல்லது வெளிநாட்டின் எந்தவொரு பகுதிக்கும் பயிற்சிக்காக அனுப்பப்பட முடியும்.

12. பயிற்சிபெறும் பயிலிளவல் (Cadets) உத்தியோகத்தர்கள் வழங்கப்படும் தங்குமிடங்களில் தங்கி, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் அல்லது சம்பந்தப்பட்ட படைத் தாபனங்களினால் அல்லது பொலிஸ் திணைக்களத்தினால் வகுக்கப்பட்ட வழக்கமான நடைமுறைளைப் பின்பற்ற வேண்டும்.

13. *மொழித் தேவைப்பாடுகள்* - தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்காக ஏற்கனவே உருவாக்கப்பட்ட அல்லது இதன் பின்னர் உருவாக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க வேண்டும்.

14. *ஆளடையாளத்தை நிரூபித்தல்*.- வேட்பாளர்கள் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது தபால் மா அதிபரினால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை அல்லது மோட்டார் வாகன பதிவாளரினால் வழங்கப்பட்டுள்ள மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் என்பன இதற்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

15. *விண்ணப்பங்கள்* – www.kdu.ac.lk எனும் இணையத்தளத்திற்கு சென்று பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

i. நீங்கள் www.kdu.ac.lk எனும் இணையத்தளத்திற்கு சென்று இணையநிலையிலேயே விண்ணப்பிக்க வேண்டும். உங்களது வசதிக்காக பல்கலைக்கழக இணையத்தளத்தில் விண்ணப்ப செயல்முறை விளக்கம் வழங்கப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்ய பல்கலைக்கழக இணையத்தில் உள்ள வழிமுறைகளை பின்பற்றவும். தபாலில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)

ii. விண்ணப்ப செயலாக்க கட்டணமாக விண்ணப்பதாரிகள் ஒரு பட்டப்படிப்பிற்காக மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1500/= (Sri Lanka Rupees) செலுத்த வேண்டும். ஏந்தவொரு விண்ணப்பதாரரும் இணையத்தளத்தின் ஊடாக வைப்புச்செய்ய முடியாத பட்சத்தில் 'உப வேந்தர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்' இலங்கை வங்கி, மொறட்டுவை - கிளையின் நடைமுறைக் கணக்கு இலக்கம் '9405831' இற்கு எந்தவொரு இலங்கை வங்கியின் கிளையிலும் ரூபா 1,500/= (ஆயிரத்து ஐநூறு ரூபா) தொகையினை வைப்பு செய்து பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து குறித்த முகவரிக்கு பதிவுத் தபாலில் முடிவுத் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

16. அடிப்படைத் தகைமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் முறையாக நிரப்பப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தலேதுமின்றி நிராகரிக்கப்படுவதுடன், அவ்விண்ணப்பக் கட்டணங்கள் மீளளிப்புச் செய்யப்படவும் மாட்டாது. உபவேந்தரவர்களால் நியமனம் செய்யப்பட்ட தெரிவுக் குழு பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களையும் மதிப்பாய்வு செய்து விண்ணப்பதாரரின் தகுதிக்கு ஏற்ப தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் ஆரம்ப நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

17. அரசாங்க அல்லது கூட்டுத்தாபனங்களில் தொழில் புரியும் ஊழியர்கள் தங்களது விண்ணப்பங்களை திணைக்கள/ கூட்டுத்தாபன/ நிலைய தலைவரினூடாக சமர்ப்பிக்கவேண்டியதுடன், அவ்விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் குறிப்பிட்ட பதவியிலிருந்து எப்போது விடுவிப்புச்செய்ய முடியும் என்பதையும் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவரிடமிருந்து உறுதிக்கடிதம் ஒன்றையும் வழங்குதல் வேண்டும்.

18. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவினால் நிர்ணயிக்கப்பட்டவாறு மதிப்பாய்வு மூலப் பிரமாணத்தின் பிரகாரம் தேவையான தரங்களை கொண்டுள்ள தேருநர்கள் மத்தியிலிருந்து பூர்வாங்க தெரிவுகள் இடம்பெறும். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட தேருநர்கள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் அவசியமெனத் தீர்மானிக்கப்படுகின்ற அதிகாரிகள் தர சோதனைகளில் பங்குபற்றுமாறு வேண்டிக் கொள்ளப்படுவார்கள். இறுதித் தெரிவானது ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்பட்ட இறுதி சபையினால் மேற்கொள்ளப்படும்.

19. நேர்முகப் பரீட்சைகளுக்கும் அதிகாரிகள் தர சோதனைகளுக்கும் தெரிவு செய்யப்படும் தேருநர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகளின் இடங்கள், நேரங்கள் மற்றும் திகதிகள் ஆகியன பல்கலைக்கழக இணையத்தளம் மூலம் அறிவிக்கப்படும். இந்நோக்கத்திற்காக விண்ணப்பதாரிகளுக்கு ஏற்படக்கூடிய பிரயாண அல்லது வேறு செலவினங்கள் இப்பல்கலைக்கழகத்தினால் கொடுப்பனவு செய்யப்படமாட்டாது.

20. அதிகாரிகள் தராதர சோதனை/இராணுவ பயிற்சி என்பவற்றில் ஈடுபடும்போது ஏற்படும் காயம் முதலான எந்தவொரு பாதிப்பிற்கும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் பொறுப்பல்ல என்பதுடன் எந்தவொரு விண்ணப்பதாரியும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திடம் எந்தவொரு நஷ்ட ஈடும் கோரமுடியாது அல்லது இலங்கை அரசாங்கத்திடமும் இச்சோதனைகளின் போது ஏற்படும் இழப்புக்களுக்கு நஷ்டஈடு கோர முடியாது.

21. தேருநர் ஒருவரை சிபாரிசு செய்வதற்கு யாரேனும் ஒருவர் விரும்பினால், அவருக்கு நற்சான்றிதழ் வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். தேருநர் ஒருவரை தெரிவு செய்வதற்காக எவ்வழியிலேனும் செல்வாக்குப் பரப்புரை செய்தல் அத்தேருநருக்கான தகைமையீனமாக கருதப்படும்.

22. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி இப்பல்கலைக்கழகத்தினால் அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்களின் நிராகரிப்பு பற்றிய கடிதத் தொடர்பு அல்லது விசாரணைகள் வரவேற்கப்படமாட்டாது.

23. வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலின் தமிழ் மொழிக்கும் சிங்கள மொழிக்கும் இடையே ஏதேனும் பரஸ்பர வேறுபாடுகள் ஏற்படின், சிங்கள மொழி மூலமான வர்த்தமானி அறிவித்தலைப் பின்பற்றுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

ஜெனரல் (ஓய்வு) கமால் குணரெத்ன,
செயலாளர், பாதுகாப்பு அமைச்சு மற்றும்
முகாமைத்துவ சபையின் தலைவர்,
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல
பாதுகாப்புப் பல்கலைக்கழகம்.

09-90

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியினை திருத்தம் செய்தல்

**பதுளை மாவட்டம்**

இலக்கம் 2282 மற்றும் 2022.05.27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டிருந்த பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர் பதவிகளுக்கு உரிய விண்ணபத்தினைப் பொறுப்பேற்கும் இறுதி திகதி 2022.10.15 ஆந் திகதி வரை நீடிப்பதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

02. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி மாத்திரம் திருத்தப்படல் வேண்டும் என்பதுடன் அந்த விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்கள் யாவும் அதே விதம் அதிகாரம் செலுத்தும் என்பதையும் தயவுடன் கருத்திற் கொள்ளவும்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பதிவாளர் நாயகம்.

09-70

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற பயிலுநர் வானொலி செயற்படுத்துநர்களின் தேர்ச்சிச் சான்றிதழ் தொடர்பான பரீட்சை - 2022

1. **தேர்ச்சிச் சான்றிதழின் வகை :**

(அ) பயிலுநர் வானொலி செயற்படுத்துநர்களின் உயர் வகுப்புத் தேர்ச்சி சான்றிதழ் ;

(ஆ) பயிலுநர் வானொலி செயற்படுத்துநர்களின் சாதாரண வகுப்புத் தேர்ச்சிச் சான்றிதழ் ;

(இ) பயிலுநர் வானொலி செயற்படுத்துநர்களின் புதிய வகுப்புத் தேர்ச்சிச் சான்றிதழ்.

இந்த தேர்ச்சிச் சான்றிதழ் தொடர்பான பரீட்சை 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் நடைபெறும்.

2. **பிரவேசிப்பதற்கான ஆகக் குறைந்த தேவைப்பாடு.**- பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல பரீட்சார்த்திகளும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த அடிப்படைத் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

1. விண்ணப்பப் படிவங்கள் கையேற்கப்படும் இறுதித் தினத்திற்கு பரீட்சார்த்திகளின் வயது பதினான்கு (14) அல்லது அதற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும்.

3. **பரீட்சை நடைபெறும் மொழி** : பரீட்சை ஆங்கில மொழியில் நடைபெறும்.

4. **பரீட்சை விதிமுறைகள் :**

(அ) **உயர் வகுப்பு.**- பரீட்சை இரண்டு (2) பகுதிகளைக் கொண்டிருக்கும்.

1 ஆம் பகுதி :
பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் ஒரே முறையில் கட்டாய வினாப் பத்திரங்கள் இரண்டிற்கு விடையெழுதுதல் வேண்டும் :-

I. ஆம் வினாப்பத்திரம்: உயர் வானொலி தொழில்நுட்பம் மற்றும் வானொலி தொலைத் தொடர்பு (03 மணித்தியாலங்கள்) : (எழுத்து வினாப்பத்திரம்)

II. ஆம் வினாப்பத்திரம்: அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நிபந்தனைகள், செயற்பாட்டு பரீட்சிப்பு மற்றும் நடபடிமுறை (02 மணித்தியாலங்கள்) : (பல்தேர்வு வினாப்பத்திரம்)

2 ஆம் பகுதி :
பிரயோக மோஸ் சமிஞ்சை பரிசோதனை (ஒரு வினாடிக்கு 05 சொற்கள்)

(ஆ) சாதாரண வகுப்பு - ஒரு அமர்வில் கட்டாய மாக வினாப் பத்திரங்கள் இரண்டிற்கும் விடையெழுதுதல் வேண்டும்.

I. ஆவது வினாப்பத்திரம்.- வானொலி தொலைத் தொடர்பு மற்றும் வானொலி திறன்கள் பற்றிய அடிப்படை விடயங்கள் (02 மணித்தியாலங்கள்): (பல்தேர்வு வினாப்பத்திரம்)

II. ஆவது வினாப்பத்திரம்.- அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான நிபந்தனைகள், செயற்பாட்டு பரீட்சிப்பு மற்றும் நடபடிமுறை (01 மணித்தியாலம்) : (பல்தேர்வு வினாப்பத்திரம்)

(இ) புதிய வகுப்பு - ஒரு தடவையில் கட்டாய வினாப் பத்திரங்கள் இரண்டிற்கும் விடையெழுதுதல் வேண்டும்.

I. ஆவது வினாப்பத்திரம்.- அடிப்படை வானொலித் திறன்கள், வானொலி மற்றும் இலத்திரனியல் கோட்பாடுகள் (02 மணித்தியாலங்கள்): (பல்தேர்வு வினாப்பத்திரம்)

II. ஆவது வினாப்பத்திரம்.- அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான நிபந்தனைகள், செயற்பாட்டு பரீட்சிப்பு மற்றும் நடபடிமுறை (01 மணித்தியாலம்) : (பல்தேர்வு வினாப் பத்திரம்)

பாடத்திட்டம் தொலைத் தொடர்புகள் ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழுவினால் அல்லது நிறுவன இணையதள பக்கத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

5. **பரீட்சை நிபந்தனைகள்.**- சகல வகைகளின் தேர்ச்சிச் சான்றிதழ்கள் தொடர்பில் கீழ்க் குறிப்பிட்ட நிபந்தனைகள் செல்வாக்குச் செலுத்தும்.

(i) அபேட்சகர்கள் பரீட்சையில் சித்தியடைவதற்கு பரீட்சையில் சகல பகுதிகளினையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். சித்தியடைவதற்கான ஆகக்குறைந்த புள்ளி மட்டம் ஒவ்வொரு வினாப்பத்திரத்திலிருந்தும் 50 புள்ளிகள் ஆகும் ;

(ii) உயர் வகுப்பு தொடர்பான பரீட்சையின் போது 1 ஆம் பகுதியை ஒரே முறையில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) உயர் வகுப்புக்கான பரீட்சையின்போது 1 ஆம் பகுதியை சித்தியடைந்த பரீட்சார்த்திகளுக்கு மாத்திரம் அவ் வகுப்பு தொடர்பாக 2 ஆவது பகுதிக்கு தோற்றுவதற்கு (மோஸ் பரீட்சைக்கு) சந்தர்ப்பம் வழங்கப்படும்.

6. **கட்டணம்.**-

(அ) **பரீட்சைக் கட்டணம்.**- (பரீட்சைத் திணைக்களத்தின் கட்டணம்) - பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். கட்டணம் செலுத்தும் போது பரீட்சை ஆணையாளர்

நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் நாட்டில் உள்ள எந்தவொரு தபால் அலுவலகம்/ மாவட்ட/ பிரதேச செயலகமொன்றுக்குச் சென்று ரொக்கமாகச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக் கொள்ளப்படும் உறுதிச் சீட்டை ஒரு பட்டியினால் விண்ணப்பப் படிவத்தில் உரிய இடத்தில் கழறாத வகையில் ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் தொடர்பாக காசுக் கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது அத்தோடு பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணங்கள் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச் செலுத்தவோ அல்லது பிற பரீட்சையொன்றுக்கு மாற்றம் செய்யவோ முடியாது.

(கவனிக்க வேண்டியவை: உறுதிச் சீட்டின் நிழற்பிரதியொன்றை பரீட்சார்த்திகள் தம் வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்.)

(ஆ) பரீட்சைக் கட்டணங்கள் (இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் கட்டணம்) - இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பெயரில் பணமாக அல்லது கடன் பத்திரம்/ வரவுப் பத்திரம் (வரவு அட்டை/செலவு அட்டை) வீசா/மாஸ்டர் ஊடாக எந்தவொரு வங்கியிலிருந்தும் கட்டளையொன்றின் ஊடாக செலுத்த முடியும். பிரவேசிப்பதற்கு விண்ணப்பப் படிவங்களை ஆவணப்படுத்தி கையளித்தோ நேரடியாக கொண்டுவந்து கையளிப்பதன் ஊடாகவோ அல்லது பதிவுத் தபாலின் ஊடாக அனுப்பியமைக்கு அல்லது கையளித்தமைக்கு சாட்சிகளை முன்வைத்தாலே தவிர அது தபாலிடப்பட்டது என்றோ கையளித்தமை தொடர்பாக செய்யப்படும் கோரிக்கைகள் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது என்பதனால் உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படாததுடன், பிறிதொரு தினத்தில் நடாத்தப்படும் வேறொரு பரீட்சைக்கு மாற்றுதல் செய்யப்பட மாட்டாது. விண்ணப்பப் படிவத்தை மீள பெற்றுக்கொண்டாலோ ஏதேனும் காரணத்தினால் பரீட்சைக்கு தோற்ற முடியாது போனாலோ எந்தவொரு பரீட்சார்த்தியும் பின்னர் நடைபெறும் உரிய பரீட்சை தொடர்பாக பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

| பரீட்சையின் வகை | 1 ஆவது பகுதிக்கான கட்டணம் ரூபா | 2 ஆவது பகுதிக்கான கட்டணம் ரூபா |
|---|---|---|
| உயர் வகுப்பு | 280.00 | 140.00 |
| சாதாரண வகுப்பு | 140.00 | - |
| புதிய வகுப்பு | 140.00 | - |

**குறிப்பு**.- அரசில் தற்பொழுது அமுலில் உள்ள சகல வரிகள் மற்றும் கட்டணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

7. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்ட தகைமைகளைப் பெற்றுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் படி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லையினுள் வருகின்ற, விண்ணப்பப் படிவம் கையேற்கும் இறுதித் தினத்திற்கு அல்லது அத்தினத்திற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை சரியாக அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். பரீட்சை தொடர்பாக விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டதும் அது பற்றி குறிப்பிட்டு அறிவித்தலொன்று பத்திரிகைகளில் இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் வெளியிடப்படும்.

அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னரும் தமது பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்தி அறிவித்தலில் குறிப்பிட்ட விதத்தில் அது பற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் விண்ணப்பதாரியின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியில் வதியும் ஒருவராயின், அவ் விபரங்களுடன் பெக்ஸ் ஊடாக பரீட்சை விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை துரிதமாக பெற்றுக்கொள்ள முடியுமான விண்ணப்பதாரிகள் பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கை கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள பெக்ஸ் இலக்கத்திற்கு அனுப்பி வினவுதல் மிகவும் பயனுடையதாக அமையும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் விசாரிக்கின்ற ஏதேனும் தகவலொன்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தம்மிடம் வைத்துள்ள விண்ணப்பப் படிவம், பரீட்சைக் கட்டணம் செலுத்திய உறுதிச் சீட்டின் நிழற் பிரதி மற்றும் விண்ணப்பத்தின் அச்சிட்ட பிரதியொன்று ஆகியவற்றை தபாலிடும் போது பதிவு செய்த பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்திருத்தல் பயனுடையது.

பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திர மொன்றை வழங்குதல், அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்று ஏற்றுக் கொண்டதாக கருத முடியாது என்பதை கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

8. உறுதிப்படுத்தல்.- கீழ்க் குறிப்பிட்டுள்ள நபர்களில் ஒருவரினால் பரீட்சார்த்தியின் கையொப்பம் உறுதிப்படுத்தப் படுதல் வேண்டும் :-

விண்ணப்பப் படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி யொருவர் தமது கையொப்பம் அரச பாடசாலையொன்றின் தலைவரொருவர்/ ஓய்வுபெற்ற அலுவலரொருவர்/ பகுதி கிராம அலுவலர்/ சமாதான நீதவான்/ உறுதியுரை வழங்கும் ஆணையாளர்/ சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு அல்லது பௌத்த கோயிலின் கோயில் தலைமையதிபதி அல்லது தலைமை பிக்கு அல்லது ஏனைய சமய நிலையங்களின் தலைமைப் பொறுப்பு வகிக்கும் சமயத் தலைவர் அல்லது மத நிலையங்களில் கருதத்தகு பதவியொன்றை வகிக்கின்ற ஒருவரினால் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

9. பரீட்சார்த்திகளை இனங்கண்டு கொள்ளல்: பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றுகின்ற சகல பாடங்களுக்காகவும் மண்டப தலைமைய திபதி திருப்தியுறும் வகையில் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அது தொடர்பாக கீழ்க் குறிப்பிட்ட ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்;
(iv) செல்லுபடியாகும் தபால் அனுமதிப்பத்திரம் (16 வயதுக்குக் குறைந்த விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமாகும்.)

அதே போன்று பரீட்சைக்கு தோற்றுபவர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள இயலும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காத வகையில் பரீட்சை மண்டபத்திற்கு உள்நுழைதல் வேண்டும். அவ்வாறு தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்கு நுழைந்த நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து மண்டபத்திலிருந்து வெளியேறும் வரை பரீட்சையை நடாத்தும் அதிகாரிகள் விண்ணப்பதாரிகளை இனங்கண்டு கொள்ளும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது இருத்தல் வேண்டும்.

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கப் பரீட்சைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப சகல பரீட்சார்த்திகளும் செயற்படுதல் வேண்டும். இந்தச் சட்டங்கள் மற்றும் கட்டளைகளின் கீழ் ஒழுங்குவிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிராத ஏதேனும் விடயமாக இருப்பின் அது தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின் படி தீர்த்து வைக்கப்படும்.

10. பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியீடு செய்தல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சார்த்திகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைகளுக்கு உட்பட வேண்டியேற்படும்.

11. விண்ணப்பப் படிவம் கையேற்கப்படும் இறுதித் தினம்.- ஒவ்வொரு ஆண்டும் ஒரு தடவை பரீட்சை நடைபெறும். பரீட்சை நடைபெறும் திகதி, பரீட்சைகள் ஆணையாளரினால் அறிவிக்கப்படும். இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் பெற்றுக்கொண்ட உரிய பிரவேசிக்கும் விண்ணப்பபடிவம் பொறுப்பேற்கும் இறுதித் தினம் அல்லது அதற்கு முன்னர் கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு கிடைக்கும் வகையில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகம்,
276, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 08.

| சான்றிதழின் வகை | பிரவேசிக்கும் இறுதித் திகதி |
|---|---|
| உயர் வகுப்பு | 2022.10.15 |
| சாதாரண வகுப்பு | |
| புதிய வகுப்பு | |

**குறிப்பு** : (i) உரிய விண்ணப்பப் படிவத்தை கீழ்வரும் இணையதள முகவரியின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும். https:/www.tran.gov.lk/down loads/ application

(ii) 2020.06.19 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரத்திற்கு ஏற்ப பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் 2022 ஆம் ஆண்டு பரீட்சை தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திற்கு பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியதுடன் பரீட்சிப்புக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. அவ் விண்ணப்பதாரிகள் புதிய விண்ணப்பப்படிவங்களை இந்த வர்த்தமானிக்கு ஏற்ப மீண்டும் அனுப்புதல் வேண்டும்.

12. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் வெளியிடப்படும் இந்த அறிவித்தல்களில் ஏதேனுமொரு மொழி அறிவித்தலில் ஏதேனும் பொருத்தப்பாடு அல்லது தொடர்பின்மை காணப்படுவதாக தென்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலுக்கு ஏற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகம்.

இலங்கைத் தொலைத்தொடர்புகள்
ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,
இல. 276, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 08,
2022, ஓகத்து 26.

09-65

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்**.

***அட்டவணை - 2022***

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 02.09.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.08.2022 |
| | | வெள்ளி | 09.09.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.08.2022 |
| | | வெள்ளி | 16.09.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.09.2022 |
| | | வெள்ளி | 23.09.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.09.2022 |
| | | வெள்ளி | 30.09.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.09.2022 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 07.10.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.09.2022 |
| | | வெள்ளி | 14.10.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.09.2022 |
| | | வெள்ளி | 21.10.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.10.2022 |
| | | வெள்ளி | 28.10.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.10.2022 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 04.11.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.10.2022 |
| | | வெள்ளி | 11.11.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.10.2022 |
| | | வெள்ளி | 18.11.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.11.2022 |
| | | வெள்ளி | 25.11.2022 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.11.2022 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.